பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 23 திங்கட்கிழமை (07-01-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:43

### தரைப்பாதை திறப்பது குறித்து ஆராய

## அமைச்சர் தலைமையில் குழு நேற்று ஓமந்தைக்கு விஜயம்

வவுனியா,ஜன.7

வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தரைவழிப்பாதையைத் திறப்பதற்கான முன்னோடி நடவடிக்கையாக பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பவியல் அமைச்சர் மிலிந்த மொரகொட தலைமையிலான குழு ஒன்று நேற்று ஓமந்தைக்கு விஜயம் செய்தது.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல மற்றும் உயர் இராணுவ அதிகாரிகளும் இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

ஏ-9 கண்டி வீதியை ஓமந்தை ஊடாக திறப்பதற்கான வாய்ப்புகள் குறித்து குழுவினர் அங்கு விரிவாக ஆராய்ந்ததாகத் தெரியவருகிறது. பின்னர் பிரமணாளங்குளம் சோதனை நிலையத்துக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளையும் குழு ஆராய்ந்தது.

வவுனியாவில் இருந்து கண்டி வீதி ஊடாகவும் பிரமணாளங்குளம் ஊடாகவும் இரு பாதைகளைத் திறப்பது குறித்து அரசு மட்டத்தில் ஆராயப்பட்டு வருகின்றது.

கண்டி வீதி வழியாக பொதுமக்களையும் பிரமணாளங்குளம் ஊடாக வாகனங்களையும் அனுமதிப்பது தொடர்பாகவும் ஆராயப்படுகின்றது.

பாதுகாப்பு அமைச்சில் இன்று இடம்பெறும் உயர்மட்ட மாநாட்டில் தரைப்பாதை திறத்தல், வன்னிக்கான பொருளாதாரத்தடை நீக்கம் ஆகிய விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்படவிருக்கின்றன. (ஐ-3)

## 'சிரச', 'சக்தி' ஊடகங்களின் கட்டுப்பாட்டு நிலையத்தில் தீ!

### ஒலி, ஒளி பரப்புச் சேவைகள் ஸ்தம்பிதம்

கொழும்பு,ஜன.7

பன்னிப்பிட்டிய பகுதியில் அமைந்திருந்த 'சிரச' இலத்திரனியல் ஊடகத்தின் தலைமைக்கட்டுப்பாட்டு நிலையத்தில் நேற்றுப் பிற்பகல் பெரும் தீ விபத்து ஏற்பட்டது.

திடீரெனப் பரவிய தீயினால் கட்டுப்பாட்டு நிலையம் முற்றாக எரிந்து போனது. அங்கிருந்த தொழில்நுட்ப, இலத்திரனியல் சாதனங்களும் தீயில் அழிந்தன. பின்னர் தீயணைப்புப் படையினர் தீயை ஒருவாறு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர். தீயினால் எழுந்த நச்சுப்புகையைச் சுவாசித்த பணியாளர்கள் 15 பேர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

இந்தத் தீ அனர்த்தத்தினால் மகாராஜா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கும் 'யெஸ்.எவ்.எம்.', 'எம்.ரி.வி', 'சிரச', 'சக்தி' ஒளி, ஒலி பரப்புச் சேவை ஆகிய ஊடகங்களின் செயற்பாடுகள் நேற்றுப் பல மணி நேரம் தடைப்பட்டன. பின்னர் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் வெளிக்கள ஒளிபரப்பு வாகனத்தின் உதவியுடன் நேற்று மாலை சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

(12ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் பகுதிகளுக்குள் ஊடுருவித் தாக்கும் இராணுவ அணியே பொலீஸாரிடம் சிக்கியது!

## அத்துருகிரியவில் மீட்கப்பட்ட ஆயுதங்களின் பின்னணியில் அம்பலமாகும் தகவல்கள்

கொழும்பு,ஜனவரி7

**விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஊடுருவி உளவு பார்த்து தாக்குதல் நடத்தும் இராணுவத்தின் புலனாய்வு அணியும், அந்த அணி வைத்திருந்த ஆயுதங்களுமே கடந்த புதன்கிழமை இரவு அத்துகிரியவில் பொலீஸாரிடம் சிக்கியிருக்கின்றன.**

**இந்த ஆயுதங்களும் இராணுவத்தினரின் உளவுப் பிரிவினரும் பொலீஸாரிடம் சிக்கியதை அடுத்து, புலிகளின் பகுதிகளுக்குள் இராணுவம் ஊடுருவி நடத்தி வந்த தாக்குதல்கள் பற்றிய இரகசிய தகவல்கள் அம்பலத்துக்கு வந்திருக்கின்றன.**

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தேர்தல் பிரசாரத்துக்கு செல்லும் வாகனத்தை இலக்கு வைத்துத் தாக்கி அழிக்கும் நோக்குடன், தமிழ் இயக்கம் (கட்சி) ஒன்றைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலர் வடக்கிலிருந்து தென்பகுதிக்கு கூட்டி வரப்பட்டுள்ளனர் என்றும் -

இதற்காக வடக்கிலிருந்து 'தேமோபற்றிக்' (Thermobaric) வெடிகுண்டுகள் பனலுவ இராணுவப் பாசறைத் தப் பிரதேசத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன என்றும் -

வடக்கிலிருந்து விசேடமாக அழைத்துவரப்பட்ட அதிகாரிகள் மூலம இந்த உறுப்பினர்களுக்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவு விசேட பயிற்சிகளை வழங்கி வருகின்றது என்றும் -

தேர்தல் பிரசார காலத்தில் ஐ.தே.கட்சி தவிசாளர் குற்றம் சுமத்தியிருந்தார்.

அப்போது அதனை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பல

(11ஆம் பக்கம் பார்க்க)

### காத்மண்டு மாநாட்டின் முடிவில்

## வாஜ்பாய் - முஷாரப் சந்திப்புக்கு ஏற்பாடு செய்தவர் சந்திரிகா!



காத்மண்டு,ஜன.7

உலகத்தின் பார்வையில் பரம எதிரிகளாகத் தோன்றும் பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் ஆகிய இருவரும் காத்மண்டு வில் ஒருவரை ஒருவர் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

'சார்க்' மாநாட்டில் கலந்து கொள்வதற்காக காத்மண்டு சென்றிருந்த சமயம் பிரதமர் வாஜ்பாயும், அதிபர் முஷாரப்பும் சிறிது நேரம் சந்தித்துப் பேசியிக்கின்றனர். நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

(11ஆம் பக்கம் பார்க்க)

## அரசு - புலிகள் பேச்சை சீர்குலைக்க மாட்டோம்!

### காத்மண்டுவில் ஜனாதிபதி தெரிவிப்பு

காத்மண்டு,ஜன.7

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை நாம் ஒரு போதும் சீர்குலைக்கப் போவதில்லை.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

'சார்க்' மாநாட்டின் இறுதியில் காத்மண்டுவில் உள்ள இலங்கை தூதரின் வாசஸ்தலத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஜனாதிபதி உரையாற்றினார். அப்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் எதிர்க்கட்சி நடந்து கொண்டது போன்று நாமும் சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்கப்போவதில்லை.

சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக தற்போது பதவிக்கு வந்துள்ள அரசாங்கம் எனக்கு போதிய விளக்கமளிக்கவில்லை.

'சார்க்' மாநாட்டில் நான் தெரிவித்த கருத்தை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். சமாதான நடவடிக்கைகளுக்கு எனது வழிகாட்டலும், ஆலோசனைகளும் தொடர்ந்து இருந்து வரும்.

எமது அரசின் ஆட்சிக்காலத் திலதிட்டமிடப்பட்டிருந்த வடபகுதிக்கு பொருள்களை அனுப்பும் நடவடிக்கை தற்போது புதிய அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது - என்று ஜனாதிபதி அங்கு தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்களில் தனது சார்பில் பிரதிநிதி ஒருவரை நியமிக்குமாறு புதிய அரசு தன்னிடம் கோரிக்கை எதனையும் விடுக்கவில்லை என்றும் ஜனாதிபதி அங்கு கூறினார். (ஐ-6-9)

## முப்படைகளின் தலைமைப் பீடத்தில் பதவிப் போட்டி உச்சக் கட்டத்தில்!

கொழும்பு,ஜன.7

நாட்டின் முப்படைகள் மற்றும் பொலீஸ் தரப்புகளின் தலைமைப்பீடத்தில் பதவிப் போட்டிகள், கருத்துவேறுபாடுகள் என்பன உச்சக் கட்டத்தை அடைந்திருப்பதாக இராணுவ ஆய்வாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

இராணுவத்தில் தளபதிக்கும், சிரேஷ்ட அதிகாரிக்கும் இடையில் முறுகல் நிலை.

மூத்த அதிகாரிகளை ஓய்வுபெறச் செய்வதிலும், பதவியை நீடிக்கச் செயவதிலும் அரசியல் புகுந்து விளையாடுவதாகவும், வெவ்வேறு அணுகுமுறைகள் கையாளப்படுவதாகவும் அரசியல் தலைமைத்துவம் மீது குற்றச்சாட்டு.

கடற்படைத் தளபதிக்கு எதிராகவும் அடுத்த கட்ட அதிகாரிகள் முணுமுணுப்பதாகக் கூறப்படுகின்றது.

கடற்படையின் ஐந்து பிராந்தியத் தளபதிகளில் நால்வரின் ஆட்சேபனையையும் மீறி, கடற்படையில் மாட்டிறைச்சிப் பாவனைக்குத் தடை விதித்திருக்கிறார் கடற்படைத் தபளதி.

நாட்டுக்குள் புலிகள் தாராளமாக ஆயுதங்களைக் கடத்திவருவதைத் தடுத்து நிறுத்துவதற்கு அவரது ஆற்றல், செயற்திறன் அற்றதாக இருப்பதாகக்குறை கூறப்படுகின்றது.

கடற்படைக்கு மேர்ஸிடஸ் பென்ஸ கார் கொள்வனவு செய்வதிலும், பஜிரோ ஜீப்புக்கு புதிய இயந்திரம் பொருத்துவதிலும் பல குளறுபடிகள் என்ற குற்றாச்சாட்டு வேறு.

விமானப்படைத் தளபதியின் நிலையும் இதுதான்.

கட்டுநாயக்கா விமானப்படைத்தளம் மற்றும் விமான நிலையம் ஆகியவை மீதான புலிகளின் அதிரடித் தாக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

**புத்தாண்டு கலண்டர்**

வாசகர்களுக்கான நான்கு வர்ண புதுவருட கலண்டர் நாளைய உதயனுடன் கிடைக்கும். உங்கள் பிரதிகளை உறுதி செய்து கொள்ளுங்கள்.

### தளபதியின் சிபார்சை நிராகரித்து

## நீல் டயஸின் பதவிக்காலத்தை மேலும் நீடித்தார் ஜனாதிபதி!

கொழும்பு,ஜன.7

இராணுவத்தில், இராணுவத்தளபதிக்கு அடுத்த தரத்தில் இருக்கும் மேஜர் ஜெனரல் நீல் டயஸை கடந்த டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் பதவியிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்லும்படி பணிப்பதற்கு இராணுவத் தளபதியால் வழங்கப்பட்ட சிபாரிசை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிராகரித்துவிட்டார்.

அனுபவம் வாய்ந்த - மூத்த - இராணுவ அதிகாரிகளின் சேவை இராணுவத்துக்கு இப்போது அவசியமானது என்று தெரிவித்து, மேஜர் ஜெனரல் நீல் டயஸின் பதவிக்காலத்தை

(12ஆம் பக்கம் பார்க்க)

# காணாமற் போனோரின் விவரங்கள் இன்று அரச அதிபரிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.7

அரச அதிபரின் கோரிக்கைக்கு அமைவாக காணாமற் போனோர் தொடர்பான விவரங்கள் யாவும் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்படவுள்ளன.

கைது செய்யப்பட்டுக் காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கத்தின் சார்பில் இந்த விவரங்களை 'கியூடெக்' நிறுவன இயக்குநர் அருட் திரு. சி.ஜெயக்குமார் அரச அதிபரிடம் கையளிக்க உள்ளார். அத்துடன் 1996 இல் கைதடியில் இடம் பெற்ற ஒரு சுற்றிவளைப்பின்போது படையினரால கைது செய்யப்பட்டு காணாமற்போன 24 பேர் தொடர்பான விவரங்களை, அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியப் பிரதிநிதி சு.பரமநாதன் அரச அதிபரிடம் கையளிக்கவுள்ளார்.

அரச அதிபரைச் சந்திக்கச் செல்வதற்காக அழைக்கப்பட்ட உறுப்பினர்களை இன்று பிற்பகல் செயலக முன்றிலில் கைது செய்யப்பட்டுக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கச் செயலாளர் ஒன்று கூடுமாறு கேட்டுள்ளார். (ஐ-9)

# பரவி வரும் காய்ச்சலினால் மேலும் மூவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,ஜன.7

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட மேலும் மூவர் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளனர்.

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த தெய்வானைப்பிள்ளை செல்லையா (வயது 78, உயரப்புலம், ஆனைக்கோட்டை) என்பவர் செப்ரிசீமியா தாக்கத்துக்குள்ளான நிலையில் நேற்று உயிரிழந்தார்.

கடந்த 4 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டிருந்த பொன்னுத்துரை துரைராசா (வயது 55, டச்சுவீதி, கோப்பாய் தெற்கு) என்பவரும் நேற்று உயிரிழந்தார்.

நிமோனியா காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் அனுமதிக்கப்பட்ட துரைசிங்கம் அருளநாயகம் (வயது 40, சிப்பித்துறை, ஆறுகால் மடம்) என்பவர் அன்றைய தினமே உயிரிழந்தார்.

இந்த வருடத்தின் முதல் ஆறு தினங்களுக்குள் காய்ச்சல் நோயால பீடிக்கப்பட்ட 5 பேர் யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்திருக்கின்றனர்.

இதேவேளை -

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று வைத்தியசாலை புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. (ஐ-6)

# வெள்ளம் வற்றியதை அடுத்து மிருசுவில் வரை பஸ் சேவை

யாழ்ப்பாணம்,ஜன.7

கொடிகாமத்திற்கும் மிருசுவிலுக்கும் இடையில் - கண்டி வீதியில் - தேங்கிநின்ற மழைவெள்ளம் வற்றியதைத் தொடர்ந்து மீண்டும் மிருசுவில் வரை பஸ் சேவைகள் நடைபெறத் தொடங்கியுள்ளன.

தொடர்ந்து பெய்த மழை காரணமாக இந்தப் பகுதியில் சுமார் இரண்டு அடிக்குமேல் வெள்ளம் தேங்கி நின்றதைத் தொடர்ந்து கடந்த சில தினங்களாக யாழ்ப்பாணத்தில் இருந்து செல்லும் பஸ்கள் அனைத்தும் கொடிகாமத்துடன் நிறுத்தப்பட்டன.

இதனால் மிருசுவில் பகுதி மக்கள பெரும் சிரமங்களுக்கு மத்தியில் தமது இருப்பிடங்களுக்குச் செல்ல வேண்டியிருந்தது.

தற்போது மழை வெள்ளம் வற்றியதைத் தொடர்ந்து பஸ்சேவைகள் வழமைபோல் மிருசுவில் சென். நீக்கிலார் ஆலயம் வரை நடைபெற்று வருகின்றன.

இதேவேளை -

பருத்தித்துறையில் இருந்து கொடிகாமம் வரை நடைபெற்றுவந்த பஸ் சேவைகளும் மழைவெள்ளம் காரணமாக வரணியுடன் நிறுத்தப்பட்டிருந்தன.

அந்தப் பகுதியிலும் வெள்ளம் வடிந்தோடியதைத் தொடர்ந்து பருத்தித்துறை - கொடிகாமம் பஸ்சேவைகளும் வழமைபோல் நடைபெற்று வருகின்றன. (க-6-15)

# குமார் கொலை விசாரணை; துரிதப்படுத்த அரசு முடிவு

கொழும்பு,ஜன.7

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் குமார் பொன்னம்பலத்தின் படுகொலை தொடர்பாக முழுமையான விசாரணை நடத்துவது என்று அரசு முடிவு செய்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கடந்த வாரம் நடந்த கூட்டம் ஒன்றிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்களும் அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்கள் சிலரும் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் குமார் பொன்னம்பலம் கொலை தொடர்பாக புதிதாக வெளியாகியுள்ள தகவல்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

குமார் பொன்னம்பலத்தின் கொலைக்கும் முன்னாள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையின் புதல்வர்களுக்கும் தொடர்பு இருப்பதாக கடந்த வாரங்களில் தகவல்கள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே. (ஐ-3)

# கடந்த ஆண்டு விபத்துகள் அதிகரிப்பு

# போக்குவரத்து விதிகளை மீறிய 781 பேருக்கு எதிராக நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.7

கடந்த வருடம் போக்குவரத்து ஒழுங்கு விதிகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில் 781 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று யாழ்.பொலீஸ் நிலையப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

பதிவு செய்யப்படாத இருநூறுக்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் யாழ்நகரப் பகுதியில் வைத்து பொலீஸாரால் கண்டுபிடிக்கப்பட்டு குறப் பணம் அறிவிடப்பட்டிருகின்றது. யாழ்.பொலீஸ் நிலையப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மட்டும் 47 பெரும் வீதி விபத்துக்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த விபத்துக்களில் 2 பேர் பலியாகியிருக்கின்றனர். 40 பேருக்கு மேல் கடுமையான காயங்களுக்கு இலக்காகியிருக்கின்றனர்.

இந்த எண்ணிக்கை கடந்த 2001 ஆம் ஆண்டை விடவும் மிகவும் அதிகமானதாகும்.

இவ்வாறு அந்தப் புள்ளி விவரங்கள் மேலும் தெரிவித்தன.

இது தொடர்பாக யாழ்.பொலீஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவு அதிகாரி எஸ்ஐ.உடுவல்ல கருத்துத்தெரிவிக்கையில் -

யாழ்ப்பாணத்தில் வாகனங்களின எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகிதத்துச் செல்கின்றது.

அத்துடன் மக்கள் மத்தியில் போக்குவரத்து ஒழுங்குகள் மற்றும் விதிமுறைகள் தொடர்பாகப் போதிய அறிவு இல்லை. அத்துடன் வாகனங்களுக்கு உரிய பதிவுகள் மேற்கொள்ளப்படுவதில்லை. வாகனம் ஓட்டுவதற்குத் தகுதியற்றவர்களும் வாகனங்களைச் செலுத்துகின்றனர்.

குடாநாட்டிலுள்ள பொது அமைப்புக்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் என்பன பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் போக்குவரத்து ஒழுங்கு விதிகள் தொடர்பான கருத்தரங்குகள, வகுப்புகளை நடத்துவதற்கு முன்வர வேண்டும்.

தற்போதைய நிலை அப்படியே தொடர்ந்தால் இனிவரும் ஆண்டுகளில விபத்துக்கள் மற்றும் ஒழுங்கு மீறல்கள் என்பன மேலும் அதிகரிப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஐ-4-ரி)

# மோட்டார் சைக்கிள்களுக்கு இன்றுமுதல் இலக்கத் தகடு

யாழ்ப்பாணம்,ஜன.7

கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டுள்ள ஒரு தொகுதி மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடுகள் இன்று முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை வழங்கப்படவிருக்கின்றன என்று யாழ். செயலக மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதம்முதல பதிவுக்கு உட்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்குரிய இலக்கத்தகடுகளே எடுத்துவரப்பட்டுள்ளன.

என்.பி.ஜி.ஏ., என்.பி.ஜி.சீ, என்.பி.ஜி.டி, என்பி.ஜி.ஈ., என்பி.ஜி.எவ், என் பி.ஜி.ஜீ., என்பி.ஜி.எச், என்பி.ஜி.ஜே. ஆகிய தொடர்களுக்கு உரிய இலக்கத் தகடுகளே வந்து சேர்ந்துள்ளன.

வாகன உரிமையாளர்கள் தமது வாகன, வாகனப் பதிவுச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் சமுகம் தந்து இலக்கத் தகடுகளைப் பெறலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வாகனப் பதிவுச் சான்றிதழை இது வரை பெறாதவர்கள் பதிவுச் சான்றிதழ் கிடைத்த பின்னர் வெள்ளிக்கிழமைகளில் இலக்கத்தகடு பெறலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

# பேக்கரி உரிமையாளரின் தன்னிச்சையான முடிவு

# பாண் விலையில் குளறுபடி; நுகர்வோர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜன.7

பாண் விலை அதிகரிப்புக் குறித்து யாழ்.நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் தனது வன்மையான கண்டனத்தைச் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்தச் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பாண் உற்பத்தி மற்றும் விற்பனை குறித்து 31.12.2001 அன்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் 450 கிராம் கொண்ட பாண் பேக்கரிகளில் 14 ரூபாவுக்கே விற்பனை செய்யப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

மொத்தவிலை, சில்லறைவிலை என பாணின் விலை பாகுபடுத்தித் தீர்மானிக்கப்படவில்லை. எனவே வேறுபட்ட விலைகளில் பாணை விற்பனை செய்ய எடுத்துள்ள முயற்சியானது பேக்கரி உரிமையாளர்கள் தாமாகவே எடுத்துக் கொண்ட முடிவாகும். இதனால் பொதுமக்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே இந்த விவகாரம் குறித்து அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவருவதுடன் பொதுமக்கள் விழிப்பாக இருக்கவேண்டுமெனவும் கேட்டுக் கொள்கின்றோம்.

31.12.2001 அன்று செயலகத்தில் நடந்த கூட்டத்தில் யாழ்.அரச அதிபர், மேலதிக அரச அதிபர்கள், விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொண்டனர் - என்று அதில் உள்ளது. (க-7)

# உள்ளூராட்சித் தேர்தல் மார்ச் 1இல் நடக்குமா?

கொழும்பு,ஜன.7

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் மார்ச் முதலாம் திகதி இடம்பெறும் என்று அரசு அறிவித்துள்ள போதும் - அத்திகதியில் தேர்தல் நடைபெறுமா என்ற கேள்வி தற்சமயம் எழுந்துள்ளது.

ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், மாகாண சபைகளுக்கான தேர்தல் ஆகியவற்றை நடத்தும் திகதியை ஜனாதிபதி அறிவிக்க முடியும். ஆனால் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் நடத்தும் திகதியை தேர்தல் ஆணையாளரே முடிவு செய்ய வேண்டும் என்று தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் திகதி பற்றி அரசு தன்னிச்சையாக முடிவு செய்யமுடியாது. அரசமைப்பு அதற்கு இடமளிக்கவில்லை. தேர்தல் ஆணையாளருடன் கலந்து ஆலோசனை நடத்திய பின்னரே தேர்தல் திகதி பற்றி அரசு முடிவு செய்யலாம் என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக ஆராய்வதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமித்த அமைச்சரவை உபகுழு உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை மார்ச் முதலாம் திகதி நடத்துவது என்று முடிவு செய்திருப்பது தெரிந்ததே. (ஐ-3)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.7

கடந்த ஓகஸ்டில் நடைபெற்ற ஜி.சீ.ஈ.(உயர்தர) பரீட்சையில் தோற்றிய யாழ்.மாவட்ட மாணவர்களின தேசிய மற்றும் மாவட்ட நிலை (RANK) தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு ஸ்ரான்லி வீதியில் உள்ள டி.எம்.ஐ.கல்வி சிறுவனத்தில் இடம்பெறவுள்ளது. (ஐ-3-9)

# எதிர்வரும் 16ஆம் திகதி முதல்

# மீசாலை விக்னேஸ்வரா ம.வி. பழைய இடத்தில் இயங்கும்

யாழ்ப்பாணம்,ஜன.7

மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தை எதிர்வரும் 16ஆம் திகதியில் இருந்து முன்னைய இடத்தில் மீண்டும் இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக வித்தியாலய அதிபர் தெரிவித்தார்.

மீசாலைப்பகுதி மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்து வருவதைத் தொடர்ந்து விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தைப் பழைய இடத்தில் இயங்க வைக்கவுள்ளதாகவும் -

இதற்கமைய மீண்டும் இயங்கவுள்ள வித்தியாலயத்தில் கல்வியைத் தொடரவிரும்பும் மாணவர்கள் அனைவரையும் இன்று திங்கட்கிழமை தொடக்கம் தமது பெயர் விவரங்களைப் பாடசாலை அலுவலகத்தில் பதிவுசெய்துகொள்ளுமாறும் வித்தியாலய அதிபர் சி.கந்தசாமி தெரிவித்தார்.

எதிர்வரும் 11ஆம் திகதிக்கு முன்னர் மாணவர்கள் அனைவரும் தமது பெயர்களைப் பதிவுசெய்து கொள்ள வேண்டும் எனவும் இதற்காக மீசாலையில் பாடசாலை அலுவலகம் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை இயங்கும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை -

வித்தியாலய மாணவர்களின் பெறறோருக்கான கூட்டம் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

# மண்எண்ணெய் அருந்திய குழந்தைகள்

தென்மராட்சி,ஜன.7

சோடாப் போத்தலுக்குள் வைக்கப்பட்டிருந்த மண்ணெண்ணெயைக் குடித்த இரு குழந்தைகள் நேற்றுமுன்தினம் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

நெல்லியடி வதிரிச் சந்தியைச் சேர்ந்த ரவீந்திரன் சர்மிளா (வயது ஒன்றரை) புலோலி மேற்கு தம்பசிட்டியைச் சேர்ந்த சிவசக்திவேல் குரேநதினி (வயது இரண்டரை) ஆகிய இரு குழந்தைகளுமே மண்எண்ணெயை அருந்தின. (ஐ-117)

# வலி.வடக்கில் மக்களை மீண்டும் குடியமர்த்துக!

## பிரதமரிடம் பிரதேச சபை கோரிக்கை

வலி.வடக்கு,ஜன.7

வலி.வடக்கில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலி. வடக்கு பிரதேச சபை, பிரதமர் ரணில விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பிரதேச சபைத் தலைவர் திருமதி பா.ஸ்ரீபாஸ்கரன் தலைமையில் மாதாந்த கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தைப் பாதுகாப்பு அமைச்சர், புனர்வாழ்வு அமைச்சர் ஆகியோருக்கு அனுப்புவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண சுமுகமான சூழ்நிலையில் பேச்சுக்களை ஆரம்பிக்க வசதியாக அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டிருப்பதை வரவேற்றுப் பாராட்டுவதென்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.(ஐ-3-86)

# 'திரிபோஷா' கிடைத்தது

தென்மராட்சி,ஜன.7

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு 'திரிபோஷா' பைக்கற்றுக்கள் நேற்றுமுன்தினம் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நாளை தொடக்கம் பிரதேசத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் போசாக்குக் குறைந்த குழந்தைகள், கர்ப்பிணிகள் ஆகியோருக்கு 'திரிபோஷா' வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# ஒட்டகங்களின் முதுகில் கட்டுவதற்காக கடத்தப்பட்ட சிறுவர்கள் மீட்பு!

## சென்னை விமான நிலையத்தில்

சென்னை,ஜன.7

ஒட்டகப் பந்தயங்களின்போது ஒட்டகங்களின் முதுகில் இருத்திக் கட்டப்படுவதற்காகச் சவூதி அரேபியாவுக்குக் கடத்தப்பட்ட 9 பங்களாதேஷ் சிறுவர்கள் இடையில் சென்னை விமான நிலையத்தில் வைத்து மீட்கப்பட்டனர்.

மீட்கப்பட்ட சிறுவர்கள் 4 முதல் 10 வயதுவரை உடையவர்களாக உள்ளனர். இவர்களையும், இவர்களது பெற்றோர்கள் என்று சொல்லப்பட்ட சிலரையும் கடவுச்சீட்டுகள் போலியானவை என்ற சந்தேகத்தின் பேரிலேயே சென்னை விமான நிலைய அதிகாரிகள் முதலில் விசாரித்தனர்.

பங்களாதேஷிலிருந்து தாம் கொல்கத்தா வழியாக வருவதாகவும் - எமிரேட்ஸ் விமானமூலம் சென்னையில் இருந்து சவூதிஅரேபியா செல்ல இருப்பதாகவும் -

அவர்கள் தெரிவித்தனர். ஆனால் அதிகாரிகளின் மேலதிக விசாரணைகளில் சிறுவர்கள் கடத்தப்படுவது அம்பலமானது. இதனையடுத்துச் சிறுவர்களும், உடன்வந்திதோரும் அதிகாரிகளால் தடுத்துவைக்கப்பட்டனர்.

மத்திய கிழக்கு நாடுகளில் நடைபெறும் ஒட்டகப் பந்தயங்களின் போது, ஒட்டகங்களின் முதுகில் சிறுவர்களைக் கட்டிவிடுவார்கள். பயத்தால் அவர்கள் எழுப்பும் அலறல் காரணமாக ஒட்டகங்கள் வேகமாக ஓடுகின்றன. எடைகுறைந்தவர்கள் என்பதால் சிறு குழந்தைகள்கூட ஒட்டகங்கள் மீது கட்டப்படுவதாகக் கூறப்படுகிறது.

(ஒ-6)

## அமெரிக்க வான் தாக்குதலால்

# சிவிலியன் உயிரிழப்புகள் ஆப்கானில் அதிகரிப்பு!

காபூல்,ஜன.7

ஆப்கானில் தொடரும் அமெரிக்க வான் தாக்குதல்களில் பொதுமக்களின் உயிரிழப்புகள் அதிகரித்து வருவதற்கு ஆப்கான் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். இருந்தபோதிலும் வான் தாக்குதல்களை நிறுத்தப்போவதில்லை என்று அமெரிக்கா தெரிவித்துவிட்டது.

ஐ.நா.ஆதரவிலான ஆப்கான் இடைக்கால அரசின் பிரதமர் ஹமீட் கர்சேயும் சிவிலியன்களின் உயிரிழப்புக் குறித்துக் கவலை தெரிவித்தார்.

ஆனால் ஆப்கானுக்கான அமெரிக்கப் பிரதிநிதி கலீல் ஜட் கூறுகையில் - அமெரிக்க நடவடிக்கைகளுக்கு ஆப்கான் தலைவர்கள் முழு ஆதரவு தெரிவித்திருப்பதாகத் தெரிவித்தார்.

ஆப்கானில் பிறந்தவரான கலீல் ஜட் முப்பது ஆண்டுகளில் முதற்றடவையாகக் கடந்த சனிக்கிழமை ஆப்கான் மண்ணை மிதித்தார்.

காபூல் விமான நிலையத்தில் வந்திறங்கிய அவர், உயிரிழந்ததாகக் கூறப்படும் மக்கள், அல்கெய்டாவின் ஆதரவாளர்கள் என்றும் -

ஆகவே அவர்களது இறப்பைப் பற்றிக் கவலைப்படாது, அமெரிக்காவின் குறிக்கோள் நிறைவேறும்வரை தாக்குதல்கள் தொடரும் என்றும் - கூறினார்.

(ஒ-6)

# இந்திய - பாகிஸ்தான் எல்லையில் தாக்குதல்!

புதுடில்லி,ஜன.7

இந்திய எல்லைப்புறப் பகுதியான பூஞ்ச்சில் நேற்றுமுன்தினம் பாகிஸ்தான் படைகள் 'மோட்டார்' ரகப் பீரங்கிகளால் தாக்குதல் நடத்தியதாகவும் -

இதனால் வீடுகள் சேதமடைந்ததில் பலர் காயமடைந்ததாகவும் -

இந்தியா தெரிவித்தது.

இதற்கிடையில் ஆப்கானிஸ்தானுடனான எல்லையில் நிறுத்தப்பட்டுள்ள தனது படையணிகளை இந்திய எல்லை நோக்கி நகர்த்தப்போவதாக அமெரிக்காவிடம் பாகிஸ்தான் தெரிவித்து உள்ளது.



இந்திய - பாகிஸ்தானிய படைகள் எல்லைப் புறத்தில் பரஸ்பரம் பீரங்கித் தாக்குதலில் ஈடுபடுவதால் அப்பகுதியில் இருந்து வெளியேறும் இந்தியக் குடும்பம் ஒன்றைப் படத்தில் காணலாம்.

பாகிஸ்தானின் கிழக்கு எல்லையில் படைகள் குவிக்கப்படுவதால், மேற்கு எல்லையில் அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப்படைகளுக்கு ஆப்கான் போரில் பாகிஸ்தானியப் படைகளின் ஆதரவு குறையும் என்று கூறப்படுகிறது.

(ஒ)

# தமிழக இடைத்தேர்தலுக்கு மத்தியபடை கண்காணிப்பு

## கோருகின்றார் கருணாநிதி

சென்னை,ஜன.7

தமிழகத்தில் அடுத்த மாதம் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள 3 சட்டமன்ற தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் மத்திய பாதுகாப்புப் படையின் கண்காணிப்பின் கீழ் நடத்தப்படவேண்டும்.



- இவ்வாறு தி.மு.க. தலைவர் கருணாநிதி கோரியுள்ளார்.

ஆண்டிப்பட்டி, வாணியம்பாடி, சைதாப்பேட்டை ஆகிய தொகுதிகளுக்கு நடைபெறவுள்ள தேர்தல் தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த உள்ளாட்சித் தேர்தல்களின் போது தமிழகத்தில் நடந்த அராஜகங்களை அடுத்து இந்தக் கோரிக்கை விடப்பட்டதாக கருணாநிதி மேலும் கூறினார்.

இந்த மூன்று தொகுதிகளிலும் தமது கூட்டணி சார்பில் தி.மு.க வேட்பாளர்களே போட்டியிடுவதாகவும் - கூட்டணியில் உள்ள மற்றைய கட்சிகள் அதற்கு ஆதரவளித்துள்ளதாகவும் -அவர் தெரிவித்தார்.

இந்த இடைத்தேர்தலில் ஆண்டிப்பட்டித் தொகுதியில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா போட்டியிடவிருப்பதாகக் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது

(ஒ-ரி)

# அமெரிக்கன் வங்கிக் கட்டடத்தில் விமானத்தை மோதிய சிறுவன் பலி!

## செப்.11 தாக்குதலை ஞாபகப்படுத்திய விபத்து!!

டம்பா,ஜன.7

அமெரிக்காவில் அனுமதி எதுவுமின்றி தன்னந் தனியனாக பதினைந்து வயதுச் சிறுவன் செலுத்திச் சென்ற சிறிய விமானம் அடுக்கு மாடிக் கட்டடத்தின் மீது மோதி விபத்துக்குள்ளானது.

புளோரிடா மாநிலம் டம்பாவில் நேற்றுமுன்தினம் நிகழ்ந்த இந்த விபத்தில், ஒற்றை இயந்திர 'செஸ்னா' விமானத்தை ஓட்டிச் சென்ற சாள்ஸ் பிஷப் (வயது 15) என்ற சிறுவன் உயிரிழந்தான். வேறு எவரும் இந்த விபத்தில் காயமடையவில்லை.



அமெரிக்கன் வங்கிக் கட்டடத்தின் மீது மோதிய விமானத்தின் வால் பகுதி ஜன்னலில் சிக்கித் தொங்குகிறது.

உயரமான அலுவலகக் கட்டடத்தின் மீது விமானம் மோதிய இந்த விபத்து கடந்த செம்ரெம்பர் 11தாக்குதல்களை ஞாபகப்படுத்தியது.

'சென்.பீற்றர்ஸ் பேர்க் - கிளியர் வோட்டர்' விமான நிலையத்தில் விமானம் ஓட்டும் பயிற்சி பெற்று வந்த சாள்ஸ் பிஷப் சம்பவதினம் பயிற்சியாளர் இல்லாமலேயே தனியாக அனுமதியின்றி விமானத்தைக் கிளப்பியதாக் கூறப்படுகிறது.

கடற்கரையில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த ஹெலி ஒன்று விமானத்தை இறக்கும்படி 'சைகை' காட்டியபோதும் அதனை உதாசீனப்படுத்திவிட்டு சாள்ஸ் விமானத்தைச் செலுத்தியதாகவும் -

அங்கிருந்து 20 மைல்கள் தொலைவில் உள்ள அமெரிக்கன் வங்கி அலுவலகக் கட்டடத்தின் 28ஆவது மாடியில் விமானம் மோதி விபத்துக்குள்ளானதாகவும்-

டம்பா நகரப் பொலீஸ் அதிகாரி ஜோ டர்கின் தெரிவித்தார். விமானத்தின் இறக்கைகள் தரையில் விழுந்த போதிலும், பிரதானபாகம் கட்டடத்தில் தொங்கிக்கொண்டிருந்தது.

கட்டடத்தின் மீது விமானம் மோதுவதற்கு முன்னதாக 'மக்டில்' விமானப்படைத் தளத்தின் மேலாகப் பறந்துசென்றதாகக் கூறப்படுகிறது.

ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்க வான் தாக்குதல்களுக்கு இதுவே கட்டளைத் தளமாகப் பயன்படுத்தப்படுகிறது.

இதேவேளை -

இந்த விபத்து இடம்பெற்ற அதேதினத்தில் லொஸ்ஏஞ்சல்ஸ் மற்றும் போல்டர் ஆகிய பகுதிகளிலும் வேறு இரு சிறிய ரக விமானங்கள் விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்துக்களுக்கும் பயங்கரவாதத்துக்கும் தொடர்பிருப்பதாகத் தெரியவில்லை என்று டம்பா நகர தலைமைச் செயலர் டொம்பிறிஜ் தெரிவித்துள்ளார்.

ஆயினும் சாள்ஸின் பெற்றோர் மற்றும் நண்பர்களிடம் அவனது சமீபகாலத் தொடர்புகள் பற்றி பொலீஸார் விசாரித்துவருவதாகக் கூறப்படுகிறது.

(ஒ)

## 11ஆவது 'சார்க்' மாநாட்டின் நிறைவில்

# வாஜ்பாய் - முஷாரப் கைகுலுக்கினர் ஆனால் முறுகல் நிலை தணியவில்லை!

இந்தியா - பாகிஸ்தானிடையேயான முறுகல் நிலை தணியும் அறிகுறி எதுவும் இல்லாமலேயே 11ஆவது 'சார்க்' மாநாடு நடந்து முடிந்தது. மாநாட்டின் தொடக்கத்திலும், இறுதிநாளிலும் பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப்பும் இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் கைகுலுக்கிய போதும் நேரடியாகப் பேச்சில் அவர்கள் ஈடுபடவில்லை.

காத்மண்டுவில் 2நாள்கள் இடம்பெற்ற 'சார்க்' உச்சி மாநாடு நேற்றுமுன்தினம் 'பயங்கரவாதத்தை ஒடுக்குவது குறித்த கோட்பாட்டை விரைந்து செயற்படுத்தவேண்டும்' என்ற உறுதிப்பாட்டுடன் நிறைவடைந்தது.

இந்தியா - பாகிஸ்தானிய முறுகல நிலைக்கு தீர்வு காணப்படும் என்ற பிரதான நம்பிக்கை நிறைவேறாததால் உச்சி மாநாடு ஏமாற்றமளித்துவிட்டதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஆனாலும், இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு அவர் உட்பட எவரும் எதிர்பார்க்காத வகையில் மாநாட்டின் தொடக்க விழாவில் பாகிஸதானிய அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் வலியச் சென்று கைகுலுக்கியதும் -

இறுதி நாளிலும் இரு தலைவர்களும் கைகுலுக்கிக் கொண்டதும்-

இரு நாடுகளிடையேயான இறுக்கத்தை சற்றுத் தளர்த்தியுள்ளதாகக் கருதப்படுகின்றது.

நீண்ட காலமாகவே பிற்போடப்பட்டு வந்த 'சார்க்' மாநாடு ஒருவாறு இப்போது நடந்து முடிந்திருப்பது அந்த அமைப்புக்கு ஒரு வெற்றி என்றே கூறப்படுகின்றது. 12ஆவது 'சாாக' உச்சி மாநாட்டை பாகிஸ்தானில் நடத்த தீர்மானிக்கப்பட்டது.

(ஒ-ரி)

## பாகிஸ்தானிலிருந்து நாடுகடத்தப்பட்ட

# முன்னாள் தலிபான் தூதுவர் அமெரிக்கப் படையின் பிடியில்!

கந்தகார்,ஜன.7

பாகிஸ்தானுக்கான முன்னாள் தலிபான் தூதர் முல்லா அப்துல் சலம் சயீப்பை தாம் தடுத்துவைத்துள்ளதாக ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்க இராணுவம் கூறுகிறது.

முன்னதாகப் பாகிஸ்தானிலிருந்து சயீப் ஆப்கானுக்கு நாடுகடத்தப்பட்டதாகவும் -

அவர் ஆப்கான் வந்ததும் அமெரிக்கப் படையினர் அவரைக் கைது செய்ததாகவும் -

கூறப்படுகிறது.

3 மாதங்களுக்கு முன்னர் ஆப்கான்மீது அமெரிக்கா தாக்குதல்களை ஆரம்பித்ததிலிருந்து, சயீப் அமெரிக்காவுக்கு எதிரான கருத்துக்களையும், தலிபான் ஆதரவுப் பிரசாரங்களையும் மேற்கொண்டு வந்தார்.

பாகிஸ்தானில் தலிபான் தூதராகப் பதவி வகித்துவந்ததால், சர்வதேச ஊடகங்களை அடிக்கடி சந்தித்துப் பேசிவந்தார்.

ஆப்கானில் தலிபான்கள் விரட்டப்பட்டு, புதிய ஆட்சி ஏற்படுத்தப்பட்டபின்னர் சயீப் பாகிஸ்தானில் அரசியல் தஞ்சம் கோரியிருந்தார்.



முல்லா அப்துல்சலம் சயீப்

ஆனால் 34 வயதான முன்னாள் தலிபான் தூதருக்குத் தஞ்சம் வழங்க மறுத்த பாகிஸ்தான் அவரை ஆப்கானுக்கு நேற்றுமுன்தினம் நாடு கடததியதாகக் கூறப்படுகிறது. இதே சமயம், பாகிஸ்தானிய அரசு, சயீப்பை நேரடியாக அமெரிக்க இராணுவத்திடம் கையளித்ததாகச் சில செய்திகள் கூறுகின்றன.

பஸ்தூன் இனத்தவரான சயீப், அமெரிக்காவால் தேடப்படும் 307 அல்கெய்டா மற்றும் தலிபான் தீவிரவாதிகளில் ஒருவராவார்.

இவரைத் தவிர, அல்கெய்டா அமைப்பின் முக்கிய தலைவர் ஒருவரும் அமெரிக்கப் படையினரிடம் பிடிபட்டுள்ளார். அல்ஷேக் அல்லியி என்ற அந்த நபர் ஒஸாமா பின்லேடனின் பயிற்சி முகாம்களுக்குப் பொறுப்பாக இருந்தவர் என்று கூறப்படுகிறது. இவர் கந்தகாரில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

சயீப் மற்றும் லிபியி ஆகியோரிடம் பின்லேடன், ஒமர் ஆகியோரின் மறைவிடங்கள் தொடர்பாக விசாரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ)

### இஸ்ரேலிய அமைச்சர் இந்தியா விஜயம்

புதுடில்லி,ஜன.7

இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் ஷிமொன் பெரஸ், 3 நாள்கள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று இந்தியா வந்து சேர்ந்தார்.

பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் தற்போது இந்தியாவில் விஜயம் மேற்கொண்டுள்ளார் என்பது தெரிந்ததே.

### அமெரிக்காவின் யோசனைக்கு இந்தியா ஆப்பு!

காத்மண்டு,ஜன.7

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் சிறப்புத் தூதுவர் ஒருவரை நியமிக்கும் அமெரிக்காவின் யோசனைக்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த்சிங் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

புதுடில்லியிலும், இஸ்லாமாபாத்திலும ஏற்கனவே அமெரிக்கத் தூதரகங்கள் உள்ளபோது, இந்தப் பிரதேசத்துக்காகத் தனியாக ஒரு சிறப்புத் தூதரை அமெரிக்கா நியமிக்கத் தேவையில்லை என்றும் அவர் கூறினார்.

(ஒ)

# முக்கிய அறிவித்தல்

**உழவு இயந்திர உரிமையாளர் சங்கத்துடன் பற்று - வரவு தொடர்புடைய சகலரையும் எதிர்வரும் 13.01.2002 ஆம் திகதிக்கு முன் தங்கள் கணக்குகளைச் சீர் செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். 2001 ஆம் ஆண்டுக்கான கணக்கறிக்கையைத் தயாரிக்க வேண்டியுள்ளதால் தயவுசெய்து சம்பந்தப்பட்டவர்களை குறிப்பிட்ட தினத்துக்கு முன்னர் தமது கணக்குகளைச் சீர்செய்துகொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.**

தலைவர்,
**உழவு இயந்திர உரிமையாளர் சங்கம்.**
வல்லிபுரம், புலோலி. (C/20118)

---

அரியாலை மத்தி இளைஞர் கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான
7 பேர் கொண்ட 12 பந்துப் பரிமாற்ற
கணேஸா ஞாபகார்த்த
**மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி**

இப்போட்டிக்கு விண்ணப்பிப்போர் படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து அனுப்பிவைக்கவும்.

*விண்ணப்பப் படிவங்கள் கிடைக்குமிடங்கள்:*

| | |
|---|---|
| டாட் என்ரபிறைசஸ் | 11,12, புதிய சந்தை உட்புறம்,யாழ். |
| அபிராமி ஹொட்டல் | இராமநாதன் வீதி, திருநெல்வேலி. (off the University) |
| ரூப்பி ரெயிலர்ஸ் | 652, நாவலர் வீதி, அரியாலை. |

விண்ணப்ப முடிவு திகதி: **17.01.2002.**

தொலைபேசி இல.:- **2790**

கடித முகவரி:
*அரியாலை மத்தி இளைஞர் கழகம்,*
*06, கனகரட்ணம் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.* (96775)


---

# துயர் பகிர்கின்றோம்

தோற்றம் 08 - 05 - 1953



மறைவு 03 - 01 - 2002

**பொன்னையா கணேசலிங்கம் B.Com.**

*[முகாமையாளர், மக்கள் வங்கி - பருத்தித்துறை (நீடித்த கருமபீடம்)]*

எங்கள் முகாமையாளரின் மறைவினால் அதிர்ச்சியும், ஆழ்ந்த துயருமடைந்த நாம் அன்னாரின் குடும்பத்தினரின் துயரிலும் பங்குகொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
ஊழியர்கள்,
மக்கள் வங்கி - பருத்தித்துறை.
(நீடித்த கருமபீடம்) (96782)
*பருத்தித்துறை.*

---

# நெஞ்சுவிட்டகலாத நினைவஞ்சலி

மூன்றாம் ஆண்டு

*மண்ணில்* 27 - 03 - 1927




*விண்ணில்* 10 - 01 - 1999

**அமரர் அ.பேரம்பலம்**
*(சரவணை மேற்கு, வேலணை)*
திதி: 07.01.2002

"அன்பெனும் இலக்கணத்திற்கு அப்பாவாய்
அகிலத்தில் எமையெல்லாம் உயரவைத்த
எங்கள் குடும்பத் தெய்வமே!
திரியாண்டு சென்றாலும்
எரிகின்றதெம் நெஞ்சம்
பரமன் தாள் சேர்ந்து
பரமானந்தப் பெருவாழ்வு பெற்றீரேவீர்."

முதலாம் ஆண்டு

*மண்ணில்* 30 - 10 - 1959



*விண்ணில்* 24 - 11 - 2000

**அமரர் பே.சிவகுமாரன்**
**(சிவா - பிரான்ஸ்)**

மகனே அவனியில் நீ மறைந்து
ஆண்டு ஒன்று சென்றாலும்
எம் இதயத்தில் நிறைந்துள்ளாய்!
செப்பமுடன் வாழ்ந்து வளமூட்டி
எம்மை உயர்த்தி விட்ட உத்தமனே!
எப்பிறப்பில் காண்போம் இனி.....?

*உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*70. அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (96781) - குடும்பத்தினர்.

---

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,ஜன.7

சங்கானை தெற்கு, ஓடக்கரை விசாலாட்சி சமேத விஸ்வநாத சிவன ஆலயத்தில் நாளைமறுதினம் புதன் கிழமை காலை எட்டு மணிக்கு திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது. (க-ரி)

## செங்கண்மாரியால் வல்வை வாசி மரணம்

தென்மராட்சி,ஜன.7

செங்கண்மாரி நோயினால் பீடிக்கப்பட்டவர் மரணமான சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வல்வெட்டித்துறை வேவில் என்னும் இடத்தைச் சேர்ந்த இ.மகேந்திரன் (வயது 52) என்பவரே மரணமானார்.

பதினைந்து தினங்களுக்கு முன்னர் செங்கண்மாரி நோய் ஏற்பட்டு கைவைத்தியம் மேற்கொண்டிருந்த வேளையில் நோய் அதிகரித்ததையடுத்து மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரும் வழியில் அவர் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-117)

## இன்றைய இசையரங்கு

வலி.வடக்கு,ஜன.7

மருதனார்மடம் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேய ஆலயத்தில் ஆறாம் நாள் இசையரங்கு நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார்.

இராமநாதன் கல்லூரி ஆசிரியை திருமதி ஞானகுமாரி சிவநேசனின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும். (க-86)

## கலந்துரையாடல்

வலி.வடக்கு,ஜன.7

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை பிரதேச செயலாளர் கா.வேதநாயகன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வருடாந்த விளையாட்டுப் போட்டிகளுக்கான அணி ஒழுங்கு மற்றும் அபிவிருத்தித் திட்டம் சம்பந்தமாக கலந்துரையாடவுள்ளமையால் சம்பந்தப்பட்ட கழகங்களின் பிரதிநிதிகளைத் தவறாது கலந்துகொள்ளுமாறு விளையாட்டு உத்தியோகத்தர் செ.மகிந்தன் கேட்டுள்ளார். (க-86)


**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
By: MR.M.A.HARI
✻ புதிய பிரிவு ஆரம்பம்:
08.01.2002 செவ்வாய்
மாலை 5 மணி.
செவ். } 5 மணி-6மணி
வியா.
HARY'S INSTITUTE
KONDAVIL EAST, KONDAVIL.
(96789)


---

# மரண அறிவித்தல்கள்

## துரைசிங்கம் அருள்நாயகம்

சரவணையைப் பிறப்பிடமாகவும் 64,அராலி வீதி, புதிய குடியிருப்பை வசிப்பிடமாவும் கொண்ட துரைசிங்கம் அருள்நாயகம் அவர்கள் 05.01.2002 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஹேமலதாவின் அன்புக் கணவரும் சிவாணு, வியாந்தினி, கேதிஸ்சா ஆகியோரின் அருமைத் தந்தையாரும் தம்பிப்பிள்ளை - பூபதி தம்பதியினரின் மருமகனும் வி.சிவகுமாரின் சகலனும் சி.பிறேமலதா, த.சிவகுமாா் ஆகியோரின் மைத்துனரும் சி.தமிழ்ச்செல்வியின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2002) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*64,அராலி வீதி,*
*புதிய குடியிருப்பு.* (96777)
*தகவல்:* **சு.தம்பிப்பிள்ளை**

## பொன்னுத்துரை துரைராசா

கோப்பாய் தெற்கு, டச்சு வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னுத்துரை துரைராசா 05.01.2002 சனிக்கிழமை நள்ளிரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற கந்தசாமி - செல்லமுத்து தம்பதியினரின் மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் ஸ்ரீரஞ்சிதன் (இத்தாலி), ஸ்ரீகாந்தன் (லண்டன்), ஸ்ரீகரன், நிலோஜன் (கலைப்பீட இரண்டாம் வருட மாணவன் - யாழ்.பல்கலைக்கழகம்), கஜன் (2002 கணிதப்பிரிவு மாணவன் - கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் புஸ்பரூபியின் (லண்டன்) மாமனாரும் கனகேஸ்வரி, ஞானமணி, நாகேஸ்வரி, வேதநாயகம் (இத்தாலி), யோகம்மா (வேவி), யோகேந்திரராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் கந்தையாபிள்ளை, கனகலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று (06.01.2002) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் மாலை 4.30 மணியளவில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*டச்சு வீதி,*
*கோப்பாய் தெற்கு.* (C/20120)
தகவல்: **து.ஸ்ரீகரன்** *(மகன்)*

## கந்தசாமி(கனகு) சதானந்தம்(ஆனந்தன்)

*(ஆனைப்பந்தி பாடசாலை **சேவை,** கார் உரிமையாளர்)*

ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும், மயிலிட்டி தெற்கு, தென்மயிலையைப் புகுந்தவிடமாகவும் கொண்ட கந்தையா - சதானந்தம் 04.01.2002 வெள்ளிக்கிழமை தமிழ்நாடு, சென்னையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் மீனலோஜினி (மீனா - லண்டன்), காலஞ்சென்ற கஜேந்திரன் மற்றும் பத்மலோஜினி, விஜேந்திரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் புவனேஸ்வரி, அருளானந்தம், நித்தியானந்தம் காலஞ்சென்ற பரமானந்தம் மற்றும் குணரத்தினம் (கனடா), செல்வரத்தினம் (கனடா), இராஜேஸ்வரி (கனடா) ஆகியோரின் சகோதரனும் துரைராசாவின் (கனடா) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கம் தமிழ்நாடு சென்னையில் நடைபெறும்.

*23, திருமலைநகர்,*
*ஆழ்வாத்திருவகம்,*
*வலசரபாக்கம்,*
*சென்னை - 87.*
***T.P.0091 - 44 - 4868748.***

தகவல்:
**துரைச்சாமி கலியுகவரதன்**
***(சமாதான நீதிவான்)***
ஏழாலை கிழக்கு,
ஏழாலை. (96778)

## திருமதி தவமணி குமாரசாமி

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி தவமணி குமாரசாமி நேற்று (06.01.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் இளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளர் கதிரேசு குமாரசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வைரவநாதர், காலஞ்சென்ற காசிநாதர் மற்றும் கணேசமூர்த்தி, நவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2002) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கனகரத்தினம் வீதி,*
*வட்டுக்கோட்டை.* (96786)
***தகவல்:*** க.குமாரசாமி *(கணவர்)*

## ஐயாத்துரை கனகசபாபதி

**(செல்வநாயகம்)**

05.01.2002 சனிக்கிழமை காலமாகிய சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலியைச சேர்ந்த ஐயாத்துரை கனகசபாபதி அவர்களின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2002) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் குடும்ப மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிறுப்பிட்டி மேற்கு,*
*நீர்வேலி.* (96787)
*தகவல்:-* **கா.வசந்தன்.** (பேறாமகன்)

## திருமதி கனகசபை நல்லம்மா

காரைநகர், களபூமி, சத்திரந்தையைச் சேர்ந்த திருமதி கனகசபை நல்லம்மா நேற்று (06.01.2002) ஞாயிற்றுக்கிழமை காரைநகரில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இலங்கை போக்குவரத்து சபை சாரதி ஆறுமுகம் கனகசபையின் அன்பு மனைவியும் பரியாரி மூத்ததம்பியின் மகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2002) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு காரைநகரில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காரைநகர்.* (96788)
தகவல்:
க.சுந்தரலிங்கம்
*(காரை மணிகண்டன் - மகன்)*

# உதயன்

## இராணுவ முஸ்தீபுகளால் அமைதி முயற்சி பாதிப்புறும்

ஒருபுறத்தில் இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாண நோர்வே அரசின் ஊடாக விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதற்கு முயன்றுவரும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு, மறுபுறத்தில் படைகளுக்கும் பொலீஸ•க்கும் ஆள்திரட்டும் நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

புதிய அரசின் இந்த இரட்டை வேடப்போக்கு சமாதானப் பேச்சு மற்றும் அமைதித் தீர்வுக்கான வாய்ப்புகளை அடியோடு குழப்பும் - பாதிப்பை ஏற்படுத்தும் - என்பது நிச்சயம்.

1994இல் சந்திரிகா அரசு விடுதலைப் புலிகளோடு பேச்சு நடத்திய சமயம் விட்ட தவறுகளே அப்போது பேச்சுக் குழம்பக் காரணமாயிற்று. அந்தத் தவறுகளில் இருந்து நல்ல பாடங்களைப் படித்து, அதனடிப்படையில் நேர்மையான மனத்தோடு பேச்சு நடவடிக்கையில் ரணிலின் அரசு ஈடுபடவேண்டும் என இப்பத்தியில் பல தடவைகள் வலியுறுத்தி வந்தோம்.

ஆனால் புதிய அரசும் 'புதிய மொந்தையில் பழைய கள்!' என்ற பாணியில் முன்னைய சந்திரிகா அரசின் போக்கில் இரட்டைவேடம் போடத் தொடங்கி இருக்கின்றது.

1994இல் சந்திரிகா அரசு - புலிகள் பேச்சு நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம், ஒருபுறம் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டு மறுபுறத்தில் பெரும் இராணுவ நடவடிக்கைகளுக்கு அரசுத் தரப்பு தயாராகி வருகின்றது என்று புலிகள் குற்றம் சுமத்தி வந்தனர். யாழ்.குடாநாட்டைச் சுற்றிவளைத்துக் கைப்பற்றி, புலிகளின் குரல்வளையை நெரிக்க அரசுப் படைகள் தயாராகி வருவதாகவும், அதற்கான கால அவகாசத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவே சமாதானப் பேச்சுக்களை அரசுத் தரப்பு இழுத்தடித்து வருகிறது எனவும் புலிகள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

கடைசியாக 1995 ஏப்ரல் 19ஆம் திகதி இரவு திருகோணமலைத் துறைமுகத்தில் படையினரின் இரண்டு கப்பல்களைப் புலிகள் குண்டுவைத்துத் தகர்த்ததோடு சந்திரிகா அரசு - புலிகள் அமைதிப் பேச்சு முறிந்துபோனது.

பேச்சுக் காலத்தில் புலிகள் சுமத்திய குற்றச்சாட்டை ஊர்ஜிதப்படுத்துவது போல அடுத்த ஆறு மாத காலத்துக்குள் பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்றின் மூலம் யாழ்.நகரைப் படையினர் கைப்பற்றினர். நீண்ட பல வருடங்களாகத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த யாழ்ப்பாணத்தை விட்டு வன்னிக்கும், பிற இடங்களுக்கும் புலிகள் நகரவேண்டியதாயிற்று.

முன்னைய ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் அரசும், அதற்குப் பின்னர் பிரேமதாஸாவின் அரசும் நீண்ட பல வருடங்களாகச் செய்யமுடியாததை - யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் வெற்றிகரமான பெரும் இராணுவ நடவடிக்கையை - 1994ஆம் ஆண்டின் சமாதானப் பேச்சுகள் முறிந்து ஆறே ஆறு மாதத்துக்குள் சந்திரிகா அரசால் செய்யமுடிந்தது என்றால், ஆறு மாதத்துக்கு முன்பிருந்தே - சமாதானப் பேச்சு நடந்த காலத்திலேயே - அந்த நடவடிக்கைகளுக்கு சந்திரிகா அரசு தயாராகி வந்தது என்பது தெளிவு.

ஒருபுறம் அமைதிப் பேச்சு என்று பாசாங்கு பண்ணிக் காலத்தை இழுத்தடித்துக்கொண்டு, மறுபுறம் பெரும் இராணுவ நடவடிக்கைகளுக்கு சந்திரிகா அரசு முஸ்தீபு செய்த காரணத்தினாலேயே - அதை நேரத்துடன் உணர்ந்து கொண்டதாலேயே - புலிகள் அந்தப் பாசாங்குப் பேச்சை முறித்துக் கொண்டனர்.

அத்தகைய 'கரவு' நடவடிக்கையின் மூலம் சந்திரிகா அரசினால் குடாநாட்டைக் கைப்பற்ற முடிந்ததாயினும் அதனால் சமாதான வாய்ப்புகள் எட்டாக் கனியானதுடன் பெரும் உயிர், உடைமை அழிவுகளும் ஏற்படுவது தவிர்க்கமுடியாததானது.

அதே தவறை தற்போதைய ரணிலின் அரசும் செய்யக்கூடாது என்பது தான் நாட்டு மக்களினது பிரார்த்தனையும் எதிர்பார்ப்பும் நம்பிக்கையுமாகும்.

இதையும் மீறி, சமாதான முயற்சிகளைக் குழப்பும் இராணுவ முஸ்தீபுகளில் ரணிலின் அரசு தொடர்ந்தும் ஈடுபாடு காட்டுமானால் அதன் விளைவு மிகப் பாரதூரமானதாக இருப்பதோடு அமைதி முயற்சிகளை அடியோடு பாதிப்பதாகவும் அமைந்துவிடும்.

# தலைமயிரால் வானை இழுத்து அச்சுவேலி இளைஞர் சாதனை!

அச்சுவேலி,ஜன.7

'ஹைஏஸ்' வான் ஒன்றை அச்சுவேலி இளைஞர் ஒருவர் தனது தலைமயிரில் கட்டியிழுத்து சாதனை படைத்துள்ளார்.

அச்சுவேலியைச் சேர்ந்த சுந்தரம் இமையகாந்தன் (வயது 23) என்ற இளைஞரே இந்தச் சாதனையை கடந்த வியாழக்கிழமை நிகழ்த்திக் காட்டினார்.

அச்சுவேலி வடக்கு, கதிரொளி சனசமூக நிலைய முன்றலில் இருந்து அச்சுவேலி பஸ்நிலையம் வரையிலான பிரதான வீதியில் சுமார் 600 மீற்றர்கள் தூரத்துக்கு வானின் முன்புறத்தில் இணைக்கப்பட்ட கயிற்றை தனது தலைமயிரில் கட்டி அவர் வானை இழுத்துவந்தார்.

இந்தத் தீரச்செயலைக் கண்ட படையினர் உட்பட அப்பகுதியில் நின்றவர்கள் அனைவரும் இளைஞரைப் பாராட்டினார்கள். (ஒ-11)

# நாட்டு நடப்பு

## பூதலத்தில் பொலிந்து வாழ்க!

*மங்கையர்க்கோர் தனியரசி மாசற்ற தயாள்*
*மறைஞான பொக்கிஷத்தாள்*
*செங்கமல திருவுளத்தாள் செயலில் வல்லாள்*
*சிறப்புறவே அநாதைகளைக் காக்கும் செல்வி*
*எங்கள் தமிழ் செய்தபெரு தவத்தின் வித்து*
*எழில் தவழ துர்க்காபுரம் அமைத்த அன்னை*
*பொங்கொளில்வெண் திருநீற்றின் பெருமையெலாம்*
*பூதலத்தில் பொலிவுறவே செய்தீர் வாழ்க!*

*கறைபடியா பெருவாழ்வு கற்ற நூல் பேரறிவு*
*துறைகள்பல தாண்டிச் சென்று தூவிய நற்றமிழ் தொண்டு*
*இறைவி மேல் கொண்ட பற்று ஈடிலா சமய வாழ்வு*
*குறைவிலாது அனைத்தும் பெற்றீர் குவலயத்து முதன்மை பெற்றீர்.*

*- விகடகவி.*

## மட்டு.மண்முனைத்துறை

# படகுச் சேவையை மீண்டும் நடத்த புலிகள் அனுமதி

மட்டக்களப்பு,ஜன.7

மட்டக்களப்பில் மண்முனைத் துறைப் படகுச் சேவையை மீண்டும் நடத்த விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் படையினரும் படையினருடன் இணைந்த தமிழ்க் குழுக்களும் ஊடுருவி புலிகளை இலக்குவைத்து கிளைமோர் தாக்குதலை நடத்தியதையடுத்து புலிகள் இந்தப் படகுச் சேவையைத் தடைசெய்திருந்தனர்.

கடந்த ஐந்து மாத காலம் நிறுத்தப்பட்டிருந்த இந்தச் சேவையை புலிகள் தமது நல்லெண்ண வெளிப்பாடாக மீள ஆரம்பிக்க அனுமதித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (க-3)

## நாவாந்துறையில் ஓட்டைப் பிரித்து இறங்கித் திருட்டு

நள்ளிரவுவேளை ஓட்டைப் பிரித்து வீட்டினுள் இறங்கிய திருடர்கள் வீட்டினுள் இருந்த சுமார் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைத் திருடிக்கொண்டு தலைமறைவாகினர். திருடர்கள் நகையுடன எடுத்துச்சென்ற சூட்கேஸ், வீட்டில் இருந்து சுமார் 15 மற்றர் தொலைவில் போடப்பட்டிருந்தது.

நாவாந்துறை, சேமக்காலை வீதிப பகுதியில் கடந்த வாரம் இந்தத் துணிகரத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

இத்திருட்டுப் பற்றி பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-15)

# புலிகளின் யுத்தநிறுத்தத்தைக் கண்காணிக்க சிஹல உறுமய விசேட மையம் அமைக்குமாம்

## அக்கட்சியின் பிரசாரச் செயலாளர் கூறுகிறார்

கொழும்பு,ஜன.7

விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள யுத்தநிறுத்தத்தைக் கண்காணிக்க விசேட மையம் ஒன்றை சிஹல உறுமய அமைக்கவிருக்கின்றது.

அக்கட்சியின் பிரசாரச் செயலாளர் உதய கம்மன்பில மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

யுத்தநிறுத்தக் காலப் பகுதியில் அதனை மீறும் வகையில் யுத்தப் பயிற்சி, ஆள்திரட்டல், ஆயுதக் கொள்வனவு போன்ற செயல்களில் விடுதலைப் புலிகள் ஈடுபடுகிறார்களா என்பதைக் கண்டறியவே இந்த மையம் அமைக்கப்படவுள்ளதாகவும் -

புலிகளின் நடவடிக்கைகள் தொடர்பாக எவரும் இம்மையத்துக்கு தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம் என்றும் - அவர் மேலும் சொன்னார்.

இதேவேளை -

விடுதலைப் புலிகள் கடந்த காலங்களில் செயற்பட்டதைப் போலவே இந்த முறையும் யுத்தநிறுத்தத்தை அறிவித்துவிட்டு அடுத்த கட்ட யுத்தத்திற்கு தம்மைத் தயார்படுத்தி வருகின்றனர் என்று சிஹல உறுமய கட்சியின் தவிசாளர் திலக் கருணாரட்ண குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

தற்போது விடுதலைப் புலிகளால் அறிவிக்கப்பட்டுள்ள யுத்தநிறுத்தத்தின் நோக்கத்தை புதிய அரசாங்கம் மிக விரைவில் உணர்ந்துகொள்ளும்.

யுத்தநிறுத்தம் என்ற போர்வையில் விடுதலைப் புலிகள் கப்பல் மூலம் ஆயுதங்களைக் கடத்தி வந்து குவிக்கத் தொடங்கியுள்ளனர்.

புலிகள் ஆயுதத் தளபாடங்களை கப்பல் மூலம் கடத்தி வருவதை பாதுகாப்பு அமைச்சும் உறுதி செய்துள்ளது.

கடந்த காலங்களிலும் இவர்கள் இதே நடைமுறையைப் பின்பற்றி வந்துள்ளனர். இது தொடர்பாக அரசாங்கம் சிந்தித்துச் செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க-3-6)

# யாழ்.ஆஸ்பத்திரியில் கடந்த வருடம் மூன்றரை லட்சம் பேருக்கு சிகிச்சை

கடந்த வருடத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையில் மட்டும் பல்வேறு நோய்களாலும் பாதிக்கப்பட்ட 3 லட்சத்து 34ஆயிரத்து 107 நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளமை வைத்தியசாலைப் புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் டிசெம்பர் 31ஆம் திகதிவரையிலான காலப்பகுதியில் வைத்தியசாலையின் வெளிநோயாளா பிரிவில் 2 லட்சத்து 78 ஆயிரத்து 103 நோயாளர்களுக்கும் -

உள்ளக சிகிச்சைப் பிரிவுகளில் 56 ஆயிரத்து நான்கு நோயாளர்களுக்கும் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

**டிசெம்பரில் அதிகம்**

இந்தக் காலப்பகுதியில் கடந்த டிசெம்பர் மாதத்தில் அதிக எண்ணிக்கையான நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களில் 40 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் அண்மைக்காலமாக அதிவேகமாகப் பரவிவரும் காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்டிருந்தார்கள் என்று வைத்தியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை -

வார்ட்டுகளில் தங்கிநின்று சிகிச்சைபெற்ற நோயாளர் எண்ணிக்கையும் ஏனைய மாதங்களை விட டிசெம்பர் மாதம் 20 வீதம் அதிகரித்துக் காணப்படுகிறது. அதிலும் காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சரி அரைவாசியாக உள்ளது.

2000ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது கடந்த ஆண்டில் குடாநாட்டில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்பதும் வைத்தியசாலைப் புள்ளிவிவரங்கள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. (க-6-15)

## விவசாயத்தில் நாட்டமுள்ள

# இளைஞர், யுவதிகளுக்கு காணியுடன் ரி56 துப்பாக்கியும்!

## அமைச்சர் நெல்சன் தரத் தயாராம்

விவசாயத்தில் நாட்டமுள்ள வேலையற்ற இளைஞர்கள், யுவதிகளுக்கு மகாவலிப் பிரதேசத்தில் காணியுடன் மண்வெட்டி, அரிவாள் உட்பட ரி.56 துப்பாக்கியும் பெற்றுத் தருவேன்.

- இப்படிக் கூறியுள்ளார் புதிய விவசாய அமைச்சர் எச்.ஜி.பி.நெல்சன்.

அமைச்சர் பதவி ஏற்ற பின்னர் தமது பொலன்னறுவத் தொகுதிக்கு விஜயம் செய்த அமைச்சர் அங்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் பேசுகையில் இப்படிக் கூறியுள்ளார்.

விவசாயத்துறை முன்னேற்றத்துக்கு இளைஞர், யுவதிகளின் பங்களிப்பு அவசியம். வேலை இல்லை, வேலை இல்லை என்று கூறிக்கொண்டு சோம்பேறிகளாக இருக்காது விவசாயத்தில் இறங்கவேண்டியது இளைஞர், யுவதிகளின் கடமையாகும் - என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-3)

# 'கலைஞானியின் மறைவினால் தமிழ்த் தேசம் கண்ணீர் சொரிகிறது'

யாழ்ப்பாணம்,ஜன.7

தமிழ்த் தேச மக்களின் வரலாற்று ஆவணங்களை பெரும் இன்னல்களுக்கு மத்தியில் சேகரித்து, அந்த அரிய பொக்கிஷங்களை பேணிப் பாதுகாத்து வந்தவர் மாமனிதர் கலைஞானி ஆ.செல்வரத்தினம். அவரின் மறைவால் தமிழ்த் தேசம் கண்ணீர் சொரிகின்றது.

- இவ்வாறு யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எம்மக்களின் நீண்டகால வரலாற்று ஆதாரங்களைச் சேகரிப்பதிலும் அவற்றைப் பேணிப் பாதுகாப்பதிலும் தனது வாழ்வையே அர்ப்பணித்து ஓயாமல் உழைத்து வந்த ஒருவரின் மறைவால் தமிழ் உலகமே சோகத்தில் ஆழ்ந்து போயுள்ளது.

அமரர் செல்வரத்தினம் இளமைக் காலத்தில் ஒரு புகைப்படப் பிடிப்பாளனாக இருந்தவர். இவர் காலப்போக்கில் தானாகவே உணர்ந்து தமிழினத்தின் தாயகமான வடக்கு - கிழக்கு தமிழ்மக்களின் இருப்பிடத்தை ஆதாரபூர்வமாக உறுதிப்படுத்தும் நோக்குடன் பல ஆவணங்களைச் சேகரிக்கத் தொடங்கினார்.

இவரது இத்தகைய உன்னதமான பணிக்காகவே விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனால் எமது தேசத்தின் உயரிய கௌரவப்பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது.

இவரது சேகரிப்பில் இருந்த பல ஆவணங்களை பணம் கொடுத்து வாங்கப் பலர் தயாராக உள்ளனர். இந்த அரிய பொக்கிஷங்களை அவர்களுக்கு விற்றுவிடாமல் பேணிப் பாதுகாப்பது தலையாய கடமையாகும்.

எமது பண்பாடு, கலை, கலாசாரம், கல்வி ஆகியவற்றை பேணிப் பாதுகாப்பது போன்று இந்த ஆவணங்களையும் பேணிப் பாதுகாக்க வேண்டிய கடமை, பொறுப்பு யாழ். பல்கலைக்கழகத்திடமே உள்ளது. இதனைப் பல்கலைக்கழகம் தட்டிக் கழித்துவிடமுடியாது.

மாமனிதரின் மறைவினால் துயருற்றிருக்கும் உறவினர்களுடனும் தமிழ் சமூகத்துடனும் இணைந்து நாமும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (க-6)

## சோமவன்ஸவை தூக்கி எறிந்துவிட்டு

# ஜே.வி.பியின் தலைவர் பதவிக்கு ரில்வின் சில்வாவை நியமிக்க முயற்சி

ஜே.வி.பியின் தலைவராக கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவை நியமிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கட்சியின் தலைவரான சோமவன்ஸ் அமரசிங்கவுக்கு எதிராகக் கட்சிக்குள் எதிர்ப்புக் கிளம்பியுள்ளதை அடுத்தே இந்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் மாணவர் அமைப்பின் ஊடாக அரசியலில் பிரவேசித்து தற்சமயம் நாடாளுமன்ற உறுப்பினராகியுள்ள அநுரகுமார திஸநாயக்கவின் ஆதரவுச் சக்தியே சோமவன்ஸவை மாற்றுமாறு குரல் கொடுத்துள்ளது.

அதேசமயம் சோமவன்ஸவை பதவியில் இருந்து நீக்கிவிட்டு அநுரகுமார திஸநாயக்கவை சர்வதேச விவகாரங்களைக் கையாளும் பொறுப்புக்கு நியமிக்கவேண்டும் என்று கட்சியின் ஒருசாரார் வற்புறுத்தி வருகின்றனர்.

பொதுச்செயலாளரான ரில்வின் சில்வாவை தலைமைப் பதவிக்கு நியமித்துவிட்டு பொதுச் செயலாளராக அநுரகுமார திஸநாயக்கவை நியமிக்க வேண்டும் என்று மற்றொரு சாரார் கோரியுள்ளனர். (க-3)

## நாளை

**மார்கழி 24**
**செவ்வாய்க்கிழமை**
**(08-01-2002)**
**திதி : தசமி**
**முன் இரவு 9.07 வரை.**
**நட்சத்திரம்: சுவாதி**
**பிற்பகல் 1.46 வரை.**
**சுபநேரம் : 11.02 - 12.32**
**ராகுகாலம் : 3.32 - 5.02**
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

முன்னேற்றம் முக்கியம்தான் எந்த விஷயத்தில் என்பது அதைவிட முக்கியம்.

மனிதக் கறி தின்னும் காட்டு மிராண்டி, முள்ளுக்கரண்டியைப் பாவித்து உண்ணக் கற்றுக்கொள்வது முன்னேற்றமா?

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



### செல்வன் வ.வத்சலாயன்

உரும்பிராயைச் சேர்ந்த வசந்தன் - தாரணி தம்பதியினரின் அன்புச் செல்வன் வத்சலாயன் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (07.01.2002) திங்கட்கிழமை தனது இல்லத்தில் வெகு குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, மாமாமார், அத்தைமார், பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், அண்ணாமார், தாத்தா, அம்மம்மா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்போடும் நீடூழி வாழ வாழ்த்துகின்றார்கள்.

சிவகுல வீதி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். (96741)

தகவல்:
பா.வசந்தன் (அப்பா).

---

அறத்தோடு இணைந்த அன்னை
காணட்டும் அகவை நூறு...!
கலாநிதி
**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**

பொய்யாத அறத்தோடு புகழ்பூக்கும் மறத்தோடு
தொய்யாத மெய்யோடு தொடரட்டும் நின்சேவை
வையத்துள் வாழ்வாங்கு வாழ்கிறாய் அன்னையே!
பொய்யல்ல தெய்வத்துள் சேர்வாய் வாழி!

உதவிக் கல்விப்பணிப்பாளரும், அதிபர் சங்கமும்
(96703) தெல்லிப்பழைக் கோட்டம்.

---

அன்னை சிவத்தமிழ்ச் செல்வியை
**வாழ்த்தி வணங்குகின்றோம்!**

அகவை 77 நிறைவுபெறும் திருநாளில்
ஸ்கந்தா சமூகம் அகமகிழ்ந்து வாழ்த்துகிறது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை,
சுன்னாகம். (96737)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

---

## வாழ்த்தி வணங்குகின்றோம்

**அன்னை சிவத்தமிழ்ச் செல்வி** அவர்களுக்கு
அகவை 77 நிறைவுபெறும் நன்னாளில் அம்மையாரை
வாழ்த்தி வணங்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
பொன்னாலை. யா/பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை. (96738)

---

## சத்துணவு வழங்கல்

தென்மராட்சி,ஜன.7

பருத்தித்துறை போருட் நிறுவனத்தினர் பருத்தித்துறைப் பிரதேசத்தில் போஷாக்குக் குறைந்த 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு சத துணவுகளை வழங்கி வருகின்றனர்.

துன்னாலை வடக்கு, மாதா கோயிலடி, கொடிக்காடு முகாம், சுப்பர் மடம், முனை, திக்கம், சக்கோட்டை போன்ற பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று போருட் நிறுவனத்தினர் சத்துணவுகளை வழங்கி வருகின்றனர்.

(க-117)

---

## முக்கிய அறிவித்தல்

சகல அங்கத்தவர்களுக்கும்!

ஒரு நாள் கோழிக்குஞ்சு
பிறிமா புறொயிலர் (Broiler) விற்பனைக்கு உண்டு.
உடன் தொடர்புகொள்ளவும்.

பொதுமுகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
(C/20107) கோப்பாய்.

---

எமது வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!
பொங்கலை ஒட்டிய சிறப்புத்தள்ளுபடி விற்பனை இப்பொழுது நடைபெறுகின்றது.

## லைடன் புடைவை நிலையம்

சகலவிதமான புடைவை வகைகளுக்கும் விசேட கழிவு வழங்கப்படும் என
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

லைடன் புடைவை நிலையம். இல.410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.2831 (C/20114)

---

சைவ உலகம்
**A/L 2002 DAY**
மீட்டல் வகுப்பு
அளவையியல்
S.சயந்தன்
செவ்., வியா. 6.30 a.m
(96685)

---

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா,
வாதநோய்கள், வலிப்புநோய்,
பீனிசம், தலையிடி,
தலை, கால் அவியல்,
சரும நோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக் கசிவு, கருவழிதல்,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக் குறைவு, மூல வியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபலமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்.

வேலணை
வைத்திய கலாநிதி
ச.இராசரத்தினம்
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459
(96198)

---

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி
**தங்கம்மா அப்பாக்குட்டி**
அவர்கள்

அன்புடன் ஆணையோச்சும்
அன்னை "தங்கம்மா அப்பாக்குட்டிக்கு'
இன்றைய தினம் ......
தோன்றிய அகவை எழுபத்தேழு
நன்னாளாம் இந்நாளினை
சென்னியில் போற்றி வாழ்த்துகின்றோம்.


கனிஷ்ட வித்தியாலயம்,
மல்லாகம். (96732)

அதிபர், ஆசிரியர்கள்,
ப.மா.சங்கம், பா.அ.சங்கம்,
கலைமகள் முன்பள்ளி.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 03 - 06 - 1952



மறைவு 08 - 12 - 2001

### அமரர் சின்னத்தம்பி யோகேஸ்வரன்

(ஊழியர், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
இன்பத்தின் இலக்கணமாய் ஈகையின் சின்னமதாய்
குடும்பத்தின் ஒளிவிளக்கை ஏற்றிவிட்டு
கூடுபற்ற விட்டுவிட்டுச் சென்றுவிட்டீர்!
புன்னகையால் பூவுலகை வென்ற யோகமே!
பூத்த பூக்கள் வாடுதையா! உமையேங்கி
நீர் இறையினுள் உறைந்தாலும்
உம் நினைவு அழியாமல் ஏங்குகின்றது.

மனைவி: நாகபூஷணி,
பிள்ளைகள்: துஷ்யந்தன் (மகன்),
ஜான்சி (மகள்),

19, செம்மணி வீதி,
யாழ்ப்பாணம். (96711) சகோதரிகள், மச்சான்மார், மருமக்கள்.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



**அமரர் சின்னத்தம்பி வல்லிபுரம்** — தோற்றம் 18-05-1935 மறைவு 10-12-2001

**திருமதி வல்லிபுரம் செல்லம்மா** — தோற்றம் 15-05-1939 மறைவு 26-11-2001

காணவில்லை ஏங்குகின்றோம் அம்மாசிவ உம்முருவை
காலங்கள்தான் கரைந்தோடி கரைதேடிச் சென்றாலும்
போகமாமா உம் நினைவு எம்மைவிட்டு அகன்றிடுமோ?
அழியாத பெரும் அன்புச் சின்னம் எம்நெஞ்சில் நீயம்மா!

உம் கடமை முடித்தாறு முன்னே அப்பாவும் உம்முடனே இணைந்தாரோ?
எப்படி நீங்கள் அன்றில் பறவை போல் பாசம் ஈர்த்திழுத்துச் சென்றதுவோ?
அறிவினில் உயர்வுதந்து எல்லோரும் போற்ற வைத்தீர்!
நெறிமுறை காட்டி நின்று நேர்நிறை வாழ்வு தந்தீர்!

அறிமுகம் நிறைந்த உங்கள் அன்பினால் உறவு ஈந்தீர்!
அன்றலர்ந்த மலரென அழகுமுகம் காட்டி மெல்ல வீசும் தென்றலிலும்
கோயில் மணி ஓசையிலும் உங்கள் குரல் ஓசை கேட்குதென்றும்
நால்வர் நினைவில் கலந்த தெய்வங்களே! இருவரும் ஒன்றாய் இறைபதம் சென்றீர்கள்.

எமது அன்புத் தெய்வங்கள் இருவரினதும் அந்தியேட்டிக் கிரியையும் வீட்டுக்கிருத்தியமும் நாளை மறுதினம் (09.01.2002) புதன்கிழமை காலை 6.00 மணிக்கு நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்ப சார்பில்:
வ.செல்வரஞ்சன் (கொழும்பு), வ.செல்வநாதன் (லண்டன்),
வ.செல்வநேசன் (கனடா),
வ.செல்வச்செந்தூரன் (லண்டன்), ஐ.தர்மலிங்கம் (கனடா).

நெடுத்தனை,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி. (96640)

---

## இரண்டாவது வருட நினைவஞ்சலி

மலர்வு 08 - 05 - 1937



உதிர்வு 31 - 12 - 1999

### திருமதி சிவலோகநாயகி குணபாலசிங்கம்

திதி: நவமி (07.01.2002)

எங்களது அன்புத் தெய்வமே!
எம்மை விட்டு நீர் சென்று
ஆண்டுகள் இரண்டு ஆனதம்மா!
எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவில் நாம் வாழ்வோம்.

பிரிவால் துயருறும்:
கனவர், மக்கள்,
மருமகள், பேரப்பிள்ளைகள்.

உசன்,
மிருசுவில். (96739)

# அன்னை சிவத்தமிழ்ச் செல்விக்கு இன்று அகவை 77 நிறைவு




நேசம் நிறைந்த உள்ளத்தால் தேசம் புகழும் தாயாக விளங்கும் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு இன்று அகவை 77நிறைவு பெறுகிறது. சைவ உலகம் செய்த மாதவத்தால் 07-01-1925 இல் உதித்த அன்னை, அறிவாற்றலாலும் அளப்பெரிய சமூகப்பணிகளாலும் உலகம் போற்றும் ஆன்மீகத்தாயாக இன்று விளங்குகிறார். தீதகன்று உலகம் உய்ய திருஅவதாரம் செய்த பேரனுபூதிமான்கள் போல் எம் திருநாட்டில் கண்கண்ட தெய்வமாக அம்மையார் விளங்குகிறார். நாவுரைப்பதும் நலம் செய்வதும் ஒன்றாய் இணைந்த இவ் ஒப்புரவாளரால் உய்வு பெற்றவர்கள் இன்று ஏராளம். தெல்லியூர் துர்க்கை அம்மன் திருக்கோயிலை அருட்கோயிலாக, ஆதரவற்றவர்க்கு அபய மளிக்கும் கோயிலாக, கலைக்கோயிலாக, கல்விக்கோயிலாக வளர்த்தெடுத்த அன்னையின் பெருமை விளம்பும் தகைமையன்று. வரலாறு கண்ட தஞ்சைப் பெருங்கோயிலை ராஜராஜசோழன் சைவத்தமிழ்ச் சமூகத்தின் சமுதாய மேம்பாட்டினைக் காக்கும் மூலக்கருவூலமாகக் கருதி வளர்த்தெடுத்தது போல் துர்க்கை அம்பாள் சந்நிதானத்தை சைவத்தமிழரின் பண்பாட்டுக்கருவூலமாக நிலைநாட்டுவதற்கு நீளநினைந்து பணிசெய்து வருபவர் சிவத்தமிழ்ச் செல்வி அவர்கள்.

## செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்

அம்மையாரின் பவளவிழா ஞாபகமாக சைவத்தமிழ் ஆய்வுநூல் நிலையத்தை ஆலய வளாகத்தில் நிறுவவேண்டும் என அறிஞர்கள் எடுத்துரைத்த கருத்துக்கமைய மிகப்பிரமாண்டமான 'சிவத்தமிழ்ச் செல்வி ஆய்வுநூலகம்' அமைக்கப்பட்டு இன்று மக்கள் பயன்படுத்துவதற்குத் திறந்துவைக்கப்படவுள்ளது. ஆலயங்கள் என்பது வெறும் வழிபாட்டுக்குரிய இடங்களாகமட்டும் அமையாது மக்களை ஆற்றுப்படுத்தும் நிலையங்களாக மாறவேண்டும் என்ற சீர்திருத்தச் சிந்தனைகளை முன்வைத்து அன்னை சிவத்தமிழ்ச் செல்வி அவர்கள் ஒவ்வோர் ஆண்டும் ஆலயத்தின் பெயரால் புதிய திட்டங்களை உருவாக்கிவருகிறார்கள். சிவத்தமிழ்ச் செல்வியின் பிறந்தநாள் அறக்கொடைநாளாக அமையவேண்டும் என்ற அன்னையின் கருத்துக்கமைய பிறந்தநாள் அறநிதியச் சபை உருவாக்கப்பட்டு வருடாவருடம் நிதியத்தின் பணிகள் தொடர்ந்துகொண்டு இருக்கிறது. இவ்வாண்டு சிவத்தமிழ்ச் செல்வி பிறந்தநாள் அறநிதியச்சபை பின்வரும் அறக்கொடைகளை வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

1. வன்னிப் பிராந்தியத்தில் இயங்கும் மல்லாவி அரசினர் வைத்தியசாலையின் அத்தியாவசிய மருந்துக்கொள்வனவுக்கு ரூபா எழுபத்தையாயிரம் வழங்குதல். (யாழ்ப்பாணத்தில் பணியாற்றும் M.S.F. மருத்துவப்பணியாளர் மூலமாக)

2. கண் சத்திரசிகிச்சைக்குரிய மருந்து - உதவிவழங்கல் பணிசெய்யும் மானிப்பாய் லயன்ஸ் கழக வேலைத்திட்டத்துக்கு ரூபா முப்பதாயிரம் வழங்குதல்.

3. தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து இயங்கும் தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் கற்கும் உச்சத் திறமையும் - வறுமையும் உடைய மாணவர்கள் 150 பேருக்குத் தலா நானூறு ரூபா விதம் வழங்குதல்.

மேற்குறித்த அறக்கொடைகள் இன்றைய விழாவில் அன்னையவர்களால் வழங்கப்படவுள்ளன.

உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன் இன்றைய விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு சிவத்தமிழ்ச் செல்வி ஆய்வுநூலகத்தைத் திறந்துவைப்பதோடு, அறக்கொடை விழாவில் பேருரையாற்றவுள்ள பெருந்தகையை இன்று சைவ உலகம் நன்கு அறியும். உயர்நீதிமன்ற நீதியரசராக விளங்கும் உயர்திரு.சி.வி.விக்கினேஸ்வரன் அவர்கள் துர்க்காதேவி தேவஸ்தானத்துடன் மிகுந்த நெருக்கமான தொடர்புகொண்டவர். மல்லாகம் மாவட்ட நீதிபதியாக முன்பு அரும்பணியாற்றியவர். இன்று தலைநகர் கொழும்பில் ஆன்மீக வைபவங்களில் தமிழ் இலக்கிய விழாக்களில் சிந்தனைக்குரிய உரைகளை ஆற்றிவருபவர். இவ்வாண்டு லண்டன் சைவத்திருக்கோயில் ஒன்றியம் நடத்திய உலக சைவ மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டு தமிழிலும் ஆங்கிலத்திலும் நீண்ட உரையாற்றி மிகுந்த பாராட்டைப்பெற்றவர். இத்தகைய பெருமகனார் இன்று யாழ்ப்பாணம் வருகைதந்து அன்னையின் விழாவைச் சிறப்பிப்பது பெருமைக்குரியது. இறையருளால் அன்னை பல்லாண்டு பல்லாண்டு வாழ இந்நாளில் வாழ்த்திவணங்குவோம். ★

## இசை பரப்பி வாழியவே!

அன்பு அறம் நேர்மை வழி ஆதரவற்றவர்க்குதவி
துன்ப துயர் துடைத்துவக்கும் தாய்மை மிகு தேவபணி
என்று உருவாகி வரும் எமது சிவத்தமிழ்ச் செல்வி!
இன்னும் பல ஆண்டுகளுக் கிசை பரப்பி வாழியவே!

- சிற்பி.

(C/20119)

## நூல் வித்யா லக்ஷ்மி!

தெல்லிநகர்த் தேவியவள் துர்க்கை யம்பாள்
தேன்தமிழின் இனிமைகண்டு தெரித மிழின்
நல்ல நல்ல நூல்கள்பல பொதிகை யாக
நறுந்தமிழின் அருவிஊற் றெடுத்து போல்
வல்லபெரும் நூலகத்தை வழங்கு என்றே
வாயார ஆசிதந்தாள் சிவத்த மிழின்
செல்வியவள் தங்கம்மா அப்பாக் குட்டி
சீர் நல்கும் நூல்வித்யா லக்ஷ்மி ஆனாள்.

"மஹாவித்துவான்"
கவிமாமணி யாழ்ப்பாணம் (இனுவில்)
பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயர்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## உங்கள் ராசி பலன்

சனீஸ்வரர், வியாழபகவான் இராகு - கேதுக்களின் கோசார மாற்றத்தினால் 2002/2003இல் ஏற்படு கின்ற பலாபலன்களை ஆசிரியர் V.A. சிவராசாவின் 'சித்திரபானு வருட பலன்கள்' என்று கேட்டு வாங்குங்கள். எங்கும் விற்பனையாகின்றது.
(96606)

## வீடற்றவன்

"வீடற்றவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும்" நூலை வாசித்தால் வீடற்றவனில் கேட்கக் கூடிய எல்லா வினாக்களுக்கும் விடை எழுதலாம். எல்லா வகை இலக்கியங்களும் படைத்த அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல். ரூபா 25/=.
(96744)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் வசிக்கும் குடியுரிமைபெற்ற, நல்லொழுக்கமுள்ள மணமகனுக்கு அழகிய, நற்பண்புள்ள மணமகள் தேவை. மணமகள் உயரம் 5 அடிக்கு மேற்படாமல் இருத்தல் அவசியம். குறிப்பு, புகைப்படத்துடன் தொடர்பு: விள.இல.1428, மேபா உதயன்.
(96756)

## காணி விற்பனைக்கு

இல.11,கற்பகவிநாயகர் வீதி, கச்சேரி - நல்லூர் றோட், யாழ்ப்பாணத்தில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- மு.சிவப்பிரகாசம், யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம், 127, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். T.P.இல. 2587.
(96731)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

40 நாள் நிரம்பிய, பூச்சி நீக்கிய, நல்லின அல்ஷேசன் (ஆண், பெண்) நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஸ்ரீ கிருஷ்ணா, பலாலி வீதி, (தபாற்பெட்டி சந்திக்கருகில்) திருநெல்வேலி.
(96758)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

இறைச்சிக்கோழி (Broilers), கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம்செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- இல.15, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
(96398)

## திருத்துதல்

மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், சகல ஸ்டீல் கமரா வகைகள், எலக்ரோனிக் பிளாஸ்கன் என்பன திருத்துதல் ஆகிய வேலைகளுக்கு: சு.நாராயணசாமி, 304, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில் - மேல்மாடி).
(96760)

## வகுப்புகள்

சிறந்த ஆசிரியர்கள் மூலம் தரம் 10, 11இற்கான ஆங்கிலம், வர்த்தகம், கணிதம், தமிழ், விஞ்ஞானம் வகுப்புகள் ஆரம்பம்: 12.01.2002 3p.m. 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(96769)

---

## தண்ணளிமிகு தனிப் பெருந்தாயை வாழ்த்தி வணங்குகின்றேன்

செந்தமிழும் சைவமும் தழைத்தோங்கச்
செப்பரிய பணிபுரியும் அம்மையவள்
காணும் அகவை எழுபத்தேழில்
ஏற்றமுடன் வாழ்கவென வாழ்த்தி வணங்குகின்றேன்.

*ஜெற் மோட்டோர்ஸ் வீதி,*
*மயிலணி,*
*சுன்னாகம்.* (96749)

பிரசங்கவாரிதி
சிவத்திரு. வ.குமாரசாமி ஐயர்.

---

உ

## சாவகச்சேரி - பெருங்குளம்

**அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை**

**கல்வயல்**

**விநாயக அடியார்களே!**

**05.01.2002 சனிக்கிழமை மேற்படி ஆலயத்தைப் பார்வையிடச் சென்ற பரிபாலனசபைக் குழுவினர் ஆலயத்தின் பெரும்பகுதி அழிந்த நிலையில் இருப்பதைக் காணக் கூடியதாக இருந்தது எனத் தெரிவித்துள்ளனர். எனவே இவற்றை நாம் முழுமையாக மீண்டும் உருவாக்குவதற்கு சுமார் 55 லட்ச ரூபாவுக்கு மேல் செலவாகும் என்பதை வழிபடுவோர்களுக்கும், உபயகாரர்களுக்கும் அறியத்தருகின்றோம்.**

*திரு.ச.கந்தையா,*
தலைவர். (96774)

*திரு.இ.கிருஷ்ணசாமி,*
செயலாளர்.
ஆலய பரிபாலனசபை.

---

இன்றைய 25ஆவது பிறந்தநாளில்

## இதய அஞ்சலி செலுத்துகிறோம்

07-01-02

மண்ணில் 07 - 01 - 1977



விண்ணில் 10 - 09 - 1999

செல்வன்

## குணசிங்கம் ஞானேந்திரன் (குட்டி-கண்ணன்)

*(கோபிகா ஆடையக உரிமையாளர்)*

*இனிய 25ஆவது வயதினிலே.......*
*உனது பிறந்த தினத்தைக் கொண்டாடிட*
*எமது முத்துக்கரங்கள் உன்னை முத்தமிட்டு*
*அரவணைக்கத் தேடுதையா!*
*நீர் நல்லூர் முருகனின் அழைப்பினை ஏற்று*
*மனமுவந்து சென்றீரோ?*
*ஓ! கண்ணா! உனது மணவாளக் கோலத்தையும்*
*காண்போம் என்றிருக்க அது*
*இறைவனுக்குப் பொறுக்கவில்லையடா!*
*உன்னை 22 வருடங்களில் தன்னுடன்*
*அழைத்து விட்டானே! - இன்று நீ பிறந்து*
*25 வருடங்கள் ஆனதேயடா!*
*கண்ணா! நீ என்றும் எங்கள் நெஞ்சில்*
*நீக்கமற நிறைந்திருப்பாயடா!*

உன் பிரிவால் துயருறும்:
பெற்றோர், சகோதரிகள், அத்தான்,
மருமகள், அம்மம்மா,
கோபிகா ஆடையக ஊழியர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

*158/1, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C-20116)

---

# SHOTOKAN KARATE ACADEMY

**Affiliated to: International University For Martial Arts (2001-01)**




இடமிருந்து வலமாக:

| | | |
|---|---|---|
| N.சுரேஸ்குமார் (1ஆம் கறுப்புப்பட்டி) | S.மொறிஸ் ஜோர்ஜ் (1ஆம் கறுப்புப்பட்டி) | D.அன்ரோ டினேஸ் (ஆசிரியர்) (4ஆம் கறுப்புப்பட்டி) |
| T.துஷானந் (2ஆம் கறுப்புப்பட்டி) | T.விஷ்ணுதாஸ் (2ஆம் கறுப்புப்பட்டி) | S.கிருஷ்பராஜ் (2ஆம் கறுப்புப்பட்டி) |

S.K.A. இயக்குநரும், கராத்தே மத்தியஸ்தருமான I.U.M.A. J110700, 2001-02 சென்செய்.D.அன்ரோ டினேஸ். M.T.Sk (4th DAN) அவர்களால் தேர்வுகைக்கப்பட்டு மேற்படி மாணவர்கள் தரம் உயர்த்தப்பட்டமையையிட்டு கழக மாணவர்கள் வாழ்த்துவதோடு தேர்வுமேற்பார்வையாளராக கடமையாற்றிய சென்செய் J.A.றஞ்சித் ஜசயேந்திரகுமார் (4th DAN) அவர்களுக்கும் தமது நன்றியைத் தெரிவிக்கின்றனர்.

மாணவர்கள்,
S.K.A., 18/5, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.

புதிய வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.


(96772)

---

# முதலாவது பிறந்ததின வாழ்த்து

## 07.01.2002

HAPPY



BIRTHDAY

## செல்வன் விபூஷன்

வசாவிளானைச் சேர்ந்த நாகேந்திரம் பரமலிங்கம் - கொட்டடியைச் சேர்ந்த குணரத்தினம் குணநிறஞ்சினி தம்பதியினரின் செல்வப் புதல்வன்

### செல்வன் விபூஷன்

இன்று (07.01.2002) திங்கட்கிழமை
தனது முதலாவது பிறந்ததினத்தை
சுவிஸில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, வசாவிளானைச் சேர்ந்த அப்பம்மா, கொட்டடியைச் சேர்ந்த அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமி, மச்சாள், மச்சான், ஜேர்மனியிலுள்ள பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், மாமா, மாமி, மச்சாள்மார், மச்சான், இத்தாலியிலுள்ள பெரியப்பா, பெரியம்மா, அண்ணா, இந்தியாவிலுள்ள மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், வன்னியிலுள்ள பெரியப்பா, பெரியம்மா, அண்ணாமார், அக்காமார் மற்றும் உற்றார், உறவினர்கள் ஆகியோர் சகல செல்வங்களும் பெற்று நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாளின் அருட்கடாட்சத்தினால் பல்லாண்டு காலம் நீடூழி வாழவேண்டுமென வாழ்த்துகின்றார்கள்.

*67,சினிவாசகம் வீதி,*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.* (96779)

தகவல்:
நா.குணரத்தினம்.

---

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 - 08 - 1936



உதிர்வு 07 - 01 - 1998

அமரர்

## மாணிக்கம் பொன்னம்பலம்

(Drilling Foreman - Irrigation Dept. - Colombo)

*ஆறாத்துயரில் எமை ஆழ்த்தி விட்டுச் சென்று*
*ஆண்டுகள் நான்காயின! நீங்கள்*
*உலகை விட்டு மறைந்தாலும்*
*எங்கள் உள்ளங்களை விட்டு மறையவில்லை!*

என்றும் உங்கள் நினைவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*பொற்பதி வீதி,*
*கொக்குவில்.* (96780)

---

# மரண அறிவித்தல்

## தம்பிப்பிள்ளை தம்பிராஜா

கலைமகள் வீதி, நல்லூர் வடக்கைச் சேர்ந்த இடமாகக் கொண்ட தம்பிப்பிள்ளை தம்பிராஜா 04.01.2002 வெள்ளிக்கிழமை மாலை காலமானார்.

இவர் தையல்நாயகியின் அன்புக் கணவரும் அனுஷியா (நேசவு ஆசிரியை), மோகனதாஸ் (பொறியியலாளர், கண்டி), அஞ்சலா சுரேக்கா (பிரான்ஸ்), மோகனராஜன் (நகைத்தொழில்), பர்மிலா (இந்து மகளிர் கல்லூரி, உயர்தரம் - 2001 உயிரியல் மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் தேவகுமார் (பிரான்ஸ்), விஜிதா (கண்டி) ஆகியோரின் மாமனாரும் அர்ச்சயா, சனோஜ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2002) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தையல்நாயகி தம்பிராஜா
*(மனைவி)*

*கலைமகள் வீதி,*
*நல்லூர் வடக்கு.* (C-20108)

மாணவருக்கான கற்றல் உபகரண அன்பளிப்பு நிகழ்வில் நீதிவான் உரை

# சிறுவர் மீதான பாலியல் துஷ்பிரயோகம் குடாநாட்டில் 90க்குப் பின் அதிகரிப்பு

## உறவினர்களாலும் விபரீதங்கள் நடக்கின்றன

யாழ்ப்பாணம்,ஜன.7

யாழ். குடாநாட்டில் சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் 1990ஆம் ஆண்டு காலப் பகுதிக்குப் பின்னர் அதிகரித்து வந்துள்ளன. இதனைக் கருத்திற்கொண்டு பாலியல் துஷ்பிரயோகங்களில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளச் சிறுவர்களைப் பெற்றோர் புத்தி கூர்மையுடன் வளர்க்கவேண்டும்.

- இவ்வாறு கூறினார் யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் சரோஜினி இளங்கோவன்.

நேற்றுமுன்தினம சனிக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தினால் யாழ்.மாவட்டத்தில் உள்ள வசதிகுறைந்த மாணவர்களுக்கான இலவச கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே நீதிவான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வு மகளிர் அபிவிருத்திப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

மேலதிக நீதிவான் அங்கு உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:-

யாழ்.குடாநாட்டில் சிறுவர்கள் மீது வயது வேறுபாடின்றி பாலியல் துஷ்பிரயோகம் நடைபெற்று வரும் சம்பவங்கள் அண்மைக் காலங்களில் அதிகரித்தே வந்துள்ளன. தற்போது கூடிய எண்ணிக்கையான முறைப்பாடுகள் பதியப்பட்டுவருகின்றன.

பாலியல் துஷ்பிரயோகங்களில் முன்னர் வெளியார் மற்றும் பலதரப்பட்டவர்களும் ஈடுபட்டு வந்தனர். ஆனால் அதிர்ச்சியூட்டும் சம்பவம் என்னவென்றால், இன்று உறவினர்களுக்குள்ளேயே இளைஞர்கள் தொடக்கம் வயது வந்தவர்கள் வரை சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டு வருகின்றனர். பிள்ளைகள் மீதான விசாரணைகள் மூலம் இது அம்பலத்துக்கு வந்துள்ளது.

அதனால்தான் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளைச் சிறுவயதில் இருந்தே புத்தி கூர்மையுடைய சிறுவர்களாகவும் கல்வியில் சிறந்தவர்களாகவும் வளர்க்க வேண்டும்.

உதாரணமாக ஒரு நாலு வயதுச் சிறுமியை அவரின் அயல் வீட்டு உறவினரான ஆண் ஒருவர் தூக்கி வைத்து விளையாடி வந்துள்ளார். இது நாளாந்தம் நடந்துவந்துள்ளது. ஆனால் ஒருநாள் சிறுமி குழறியபடி ஓடிவந்து தாயாரிடம் அந்த 'மாமா' நடந்துகொண்ட விதம் குறித்துத் தனது தாயாருக்குக் கூறியிருக்கிறார்.

உடன் தாயார் விளங்கிக் கொண்டு பொலீஸாரிடம் இது தொடர்பாக அறிவித்துச் சட்டப்படி அவருக்குத் தண்டனையினைப் பெற்றுக் கொடுத்த சம்பவம் ஒன்றும் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

எனவே பெற்றோர்கள் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்திலிருந்து தற்பாதுகாத்துக்கொள்ள நல்ல புத்தி கூர்மையுடையவர்களாகச் சிறுவயதினிலேயே பிள்ளைகளுக்கு ஆலோசனைகளை வழங்கி வளர்த்துக்கொள்வதன் மூலம் அதிகரித்து வரும பாலியல் துஷ்பிரயோகத்தைத் தடுக்கமுடியும்.

சிறுவர் மற்றும் பெணகள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரிக்குமானால் அவர்கள் மனம் பாதிக்கப்பட்டுச் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டு ஒரு மனநோயாளியாக மாறும் நிலையே உருவாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

சட்டத்தரணி ரி.சிவலிங்கம் தமதுரையில் குறிப்பிட்டதாவது:-

சிறுவர்களை வேலைகளுக்கு அமர்த்துதல், கல்வியில் இருந்து இடைநிறுத்துதல் பெரும் குற்றமாகும். உண்மையிலேயே பெற்றோர்கள் பிள்ளைகளைத் தமது குடும்பச் சுமைகளின் காரணமாகப் பல தவறான வழிக்கு இட்டுச் செல்கின்றனர்.

ஏழ்மை காரணமாகப் பிள்ளைகளின் கல்வி இடைநிறுத்தப்படக் கூடாது என்பதால்தான் அரசு இலவச புத்தகங்கள், சீருடைகளை வழங்கும் நடைமுறையினைக் கொண்டு வந்தது. இதனைப் பெற்றோர்கள் சரியான முறையில் பயன்படுத்திப் பிள்ளைகளைக் கல்வியில் ஈடுபாடு கொண்டவர்களாக்க வேண்டும். அதன் மூலம் எதிர்காலத்தில் சிறந்த கல்விச் சமுதாயம் ஒன்றை உருவாக்க முடியும் - என்றார்.

மகளிர் அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தமது தலைமையுரையில்-

இன்று எமது நிறுவனம் யாழ். மாவட்டத்தில் உள்ள 35 பாடசாலைகளில் உள்ள வசதி குறைந்த 140 மாணவர்களுக்கு இலவச கற்றல் உபகரணங்களை வழங்கிவருகின்றது. ஆனால் வசதி குறைந்த மாணவர்கள் எண்ணிக்கை அதிகம்.

ஒரு நிறுவனத்தினால் வசதி குறைந்த எல்லா மாணவர்களுக்கும் உதவிகளை வழங்கமுடியாமல் உள்ளது - என்றார்.

தேசிய கல்வி நிறுவன சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி தனலட்சுமி வில்வநாதன், யாழ். கல்விவலய சேவைக்கால ஆசிரியை திருமதி பாலாம்பிகை சுப்பிரமணியம் ஆகியோரும் இந்த நிகழ்வில் உரைநிகழ்த்தினர். (ஐ-180)

## திருட்டுப் போன 3 மோ.சைக்கிள்கள் பொலீஸாரால் மீட்பு!

யாழ்ப்பாணம்,ஜன.7

குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் திருட்டுப் போன 3 மோட்டார் சைக்கிள்கள் பொலீஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இந்த மோட்டார் சைக்கிள்கள் பருத்தித்துறை, மானிப்பாய், ஏழாலைப் பகுதிகளில் திருடப்பட்டவை எனவும் -

கடந்தவாரம் திருடர்களிடம் இருந்து மீட்கப்பட்ட இந்த 3மோட்டார் சைக்கிள்களும் தற்போது யாழ். பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன என்றும் -

உரியவர்கள் வந்து தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ள முடியும் என்றும் - பொலீஸார் தெரிவித்தனர்.

இதேவேளை -

குடாநாட்டில் திருட்டுப்போன 25க்கும் மேற்பட்ட சைக்கிள்கள் யாழ். பொலீஸ் நிலையத்தில் நீண்டகாலமாக வைக்கப்பட்டிருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.(க-4-ரி)

## காணாமற்போனோர் விசாரணை; உறவினருக்கு சி.ஐ.டியினர் அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.7

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அந்த விசாரணைகளுக்காக மேலும் 27 பேரின் உறவினர்களுக்கும், சாட்சிகளுக்கும் யாழ்.பொலீஸ் நிலையத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்திருக்கின்றனர்.

காணாமற்போனவரின் விவரம், கோவை இலக்கம், சாட்சியத்துக்கு அழைக்கப்பட்டோரின் விவரம் என்பன முறையே வருமாறு:-

★ கே.சுரேஸ், கே.பாலகிருஸ்ணன் (இல.125/1, பீச் றோட், குருநகர்), கோவை இல. பி.ஐ.9/67 (இப்பகுதி கிராம அலுவலர் வரவும்)

★ எஸ்.அற்புதநேசன் (கற்கோவளம், பருத்தித்துறை), கோவை இல. ஐ.ஆர்.150 (இப்பகுதிக் கிராம அலுவலர் வரவும்)

★ அருளப்பு அன்ரன் யூலியன் (இல.31, பீச் றோட், குருநகர்) கோவை இல.பி.ஐ.398, சாட்சிகள்:- அன்ரன் யூலியன் திரேசம்மா, பீச் றோட், குருநகர் (எம்.ராசா என்பவரையும் கூட்டி வரவும்) ஜே/69 கிராம அலுவலர்.

★ சண்முகநாதன் சந்திரதயாளி, சண்முகநாதன் லலிதா (போரூட் வீதி, யாழ்ப்பாணம்), கோவை இல. பி.ஐ.435, சாட்சிகள் ரி.அமிலன், பிரதேச செயலக வீதி, சுன்னாகம், ஜே/79, கிராம அலுவலர்.

★ சந்திரசேகரன் லோகேஸ்வரன் (ஆனந்தா ஸ்ரோர்ஸ், இணுவில் வீதி, மானிப்பாய்), கோவை இல. பி.ஐ. 206, சாட்சிகள்:- செல்வம் சந்திரசேகரம் (காணாமற்போனவரின் இறப்புச் சான்றிதழ், பொலீஸ் முறைப்பாட்டுச் சான்றிதழ் என்பவற்றையும் கொண்டு வரவும்), ஜே/289 கிராமசேவையாளர்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள 16பேரின் உறவினர்கள் மற்றும் அவர்கள் தொடர்பான விவரங்கள் தெரிந்தோர் வருகைதருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

★ பாலன் சிவராசன் (மட்டுவில் மேற்கு), கோவை இல. பி.ஐ.475.

★ ரி.அம்பிகைபாகன் (குப்பிளான தெற்கு, ஏழாலை), கோவை இல. பி.ஐ.434.

★ ராஜரட்ணம் சிறீதரன் (டச் றோட், கோப்பாய்), கோவை இல. 460.

★ நமசிவாயம் கேதீஸ்வரன் (வள்ளியம் கோயிலடி, அரியாலை), கோவை இல. பி.ஐ.4/443.

★ முருகேசு ஜெயராஜ் (பிளவர் வீதி, குருநகர்), பி.ஐ. 350.

★ தேவதாஸன் றெஜினோட் ரூபராஜ் (இல.310, பருத்தித்துறை வீதி, நல்லூர்), கோவை இல. பி.ஐ. 9/73.

★ இராசேந்திரன் குகரூபன் (இல. பி.ஐ.361, செல்லர் வீதி, நல்லூர்), கோவை இல.பி.ஐ.361.

★ மகீந்திரம் பாபு (இல.697, கச்சேரி நல்லூர் வீதி), கோவை இல. பி.ஐ.346.

★ ஏ.கே.ரகுமான் (பீச் றோட், குருநகர்), கோவை இல.பி.ஐ.279.

★ அன்ரன் மைக்கல் கொல்வின் (இல.17/7, பீச் றோட், குருநகர்), கோவை இல. பி.ஐ.427.

★ தங்கவேல் சந்திரகுமார் (துனங்களப்பு வீதி, சாவகச்சேரி), கோவை இல. பி.ஐ.468.

★ தர்மலிங்கம் கருணாகரன் (கைதடி தெற்கு, நாவற்குழி), கோவை இல.பி.ஐ.448.

★ ஜேசுதாஸன் அமிங்கிலோ (இல.7, மத்தியமேற்கு வீதி, குருநகர்), கோவை இல. பி.ஐ.404.

★ மனுவல் அந்தோனி (இல.26, மத்தியமேற்கு வீதி, குருநகர்), கோவை இல.பி.ஐ.420.

★ துரைசிங்கம் செந்தில்நந்தன் (இல.6, வில்வெற்தெரு லேன், அரியாலை), கோவை இல.பி.ஐ.9/45.

★ பிரான்ஸிஸ் யூடின் பெனாசியஸ் (இல.17/7, மத்திய வீதி, குருநகர்), கோவை இல.433. (க-4-ரி)

## உயர் தொழில்நுட்ப நிறுவனம்; புதிய மாணவர்கள் அனுமதி

### விரிவுரையாளர் பதவிக்கு வெற்றிடம்

யாழ்.உயர்தொழில்நுட்ப நிறுவனத்திற்குப் புதிய மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்ப முடிவு திகதி மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் கற்கை நெறிகளைத் தொடர விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு அதன் இயக்குநர் ரி.ராஜரட்ணம் அறிவித்துள்ளார்.

இதேவேளை -

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் பகுதிநேர விரிவுரையாளர்களாகக் கடமையாற்ற விரும்பும் விரிவுரையாளர்களிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.


விரிவுரையாளர்களாகக் கடமையாற்றத் தகுதியுடையவர்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் மேலதிக விவரம் தேவைப்படுவோரை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

## கல்விச்சாலைக் காட்சிகள்




நல்லூர் திவ்விய ஜீவன சங்க சிவானந்தர் சிறுவர் பாடசாலையின் பரிசளிப்பு விழாவும், யோகராஜ் சுவாமி சச்சிதானந்த மகராஜ் அவர்களின் பிறந்ததின விழாவும் அண்மையில் நடைபெற்றன.

**வித்துவான் க.சொக்கலிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார். விழாவில்** சிவானந்தா சிறுவர் பாடசாலை மாணவர்கள் வழங்கிய கலை நிகழ்வு ஒன்றின் காட்சி. (ஐ-180)



ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பாடசாலைக்கு தலா ஒவ்வொரு கதிரைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். அதிபர், ஆசிரியர்களைக் கௌரவித்து அந்த மாணவர்கள் நடத்திய விழாவில் கதிரைகளுடன் மாணவர்கள் தோன்றிய காட்சி. (ஐ)




கரவெட்டி முன்பள்ளி ஆசிரியர் சங்கம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடத்திய மழலைகள் கலை விழாவில் சங்கச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி குமுதினி உரையாற்றுவதை படத்தில் காணலாம். கரவெட்டி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், பருத்தித்துறை பிரதேச சபை உப தலைவர் ப.இரவீந்திரன், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி, சிறுவர் பாதுகாப்பு நிதிய இணைப்பாளர் சீ.இன்பரூபன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம். (ஐ-117)



வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் சென்.மேரீஸ் முன் பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. பாடசாலை அதிபர் க.புலேந்திராசா போட்டியில் வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். *(படம் : சண்டிலிப்பாய் செய்தியாளர்)*

## வாழ்த்தி ஆசி கூறுகின்றோம்

77ஆவது அகவை காணும்
சிவத்தமிழ்ச்செல்வி துர்க்காதுரந்தரி

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**

அவர்கள்

சைவத்துக்கும் தமிழுக்கும் சமுகத்துக்கும் ஆற்றிவரும் சேவைகள் மேன்மேலும் தொடர வாழ்த்தி ஆசி கூறுகின்றோம்.

*தலைமைச் செயலகம்,*
*74, பிறவுண் வீதி,*
*நீராவியடி, யாழ்ப்பாணம்.*

சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம்.

(96797)

## நன்றி கூறுகின்றோம்

### வதிரி, கரவெட்டி
### ஸ்ரீபரமானந்த ஆச்சிரமத்துக்கு

கட்டடத் திருத்த வேலைகளுக்காக ரூபா ஐந்து (5) லட்சம் ஒதுக்கீடு செய்து அதில் ரூபா இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரத்தைத் தந்துதவியமைக்காக



முன்னாள் அமைச்சர்
**திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்



யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளரும்
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான
**உயர்திரு.கா.வே.குகேந்திரன்**
[ஜெகன்]
அவர்களுக்கும்



ஈ.பி.டி.பி. வடமராட்சி அமைப்பாளரும்
பருத்தித்துறைப் பிரதேச சபைத்
தலைவருமான
**உயர்திரு.ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்**
[ரங்கன்]
அவர்களுக்கும்

நன்றி கூறுகின்றோம்.

தலைவர், தர்மகர்த்தா சபையினர்,
சிறார்கள், முதியோர்கள், ஊழியர்கள்,
ஸ்ரீபரமானந்த ஆச்சிரமம்,
வதிரி, கரடிவெட்டி.

(96792)

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

### நல்லூர் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம்

மேற்படி ஆலய புனரமைப்புத் திருப்பணிக்காக 2 1/2 லட்ச ரூபா நிதியை ஒதுக்கீடு செய்து அதிலிருந்து 1 1/4 லட்ச ரூபாவை எமக்கு உடனடியாக வழங்கி உதவிய பெருந்தகைகளான



ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும்
முன்னாள் அமைச்சருமான
**உயர்திரு. டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்



எமது நல்லூர் பிரதேச சபைத் தலைவர்
**திரு. K.மணிபல்லவராஜன்**
(நிஷாந்தன்)
அவர்களுக்கும்



மேலும் இந்த நிதியினைப் பெறுவதற்குப் பல்வேறு வகையிலும் உதவிய வலி.கிழக்கு பிரதேச சபைத் தலைவர்
**திரு. பூ. குணசிங்கம்**
அவர்களுக்கும்

எமது மனமார்ந்த நன்றிகளைக் கூறிப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

\- திருப்பணிச் சபையினர்.

ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம்,
வடகிழ் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(96791)

## 10ஆம் திகதிவரை சீசன் டிக்கெட் பெறலாம்

யாழ்ப்பாணம்,ஜன.7

பாடசாலை மாணவர்களுக்கான "சீஸன் ரிக்கெட்" வழங்கும் பணிகள் எதிர்வரும் 10ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்று வ.பி.போ. சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

"சீஸன் ரிக்கெட்" தேவைப்படுவோர் யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் இயங்கும் விசேட கருமபீடத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த 5ஆம் திகதியுடன் "சீஸன் ரிக்கெட்" வழங்கும் பணி முடிவடையும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (க-7)

## அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.7

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட பாடசாலைகளின் அதிபர்களுக்கான அவசர கூட்டம் இன்று இடம்பெறவிருப்பதாக வலயக் கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

உடுவில், தெல்லிப்பழை ஆகிய கல்விக் கோட்டங்களுக்கான கூட்டம் இன்று காலை 10 மணிக்கு இராமநாதன் கல்லூரியிலும் -

சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய கோட்டங்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் 2மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலும்-

நடைபெறவிருக்கின்றன. (ஐ-3)

## கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.7

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளையினால் ஆசிரியர்களிடையே நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலை மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்.கல்விக் கோட்டமும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையும் பங்குபற்றுகின்றன. (ஐ-3)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் ஆள்சேர்ப்பு

யாழ்ப்பாணம்,ஜன.7

வலிகாமம் கல்வி வலயப்பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ சாதாரணப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் விசேட சித்தி அல்லது ஆங்கில இலக்கியத்தில் திறமைச்சித்தி பெற்று அத்துடன் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் இந்தப்பதவிக்கு விண்ணப்பிக்கமுடியும் என்றும் -

விண்ணப்பங்கள் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் 'வலயக் கல்விப்பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம், மருதனார் மடம்' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் -

அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)


## ஆள் தேவை

சைக்கிள் திருத்துவதற்கு திறமையும், நற்குணமும் உடைய ஓர் ஆள் தேவை. உடன் தொடர்புகொள்ளவும்.
இல.28, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(96798)

**MATHS CENTRE**
M.M.V. ROAD, NELLIADY

**O/L**
எடுத்தவர்களுக்கான
விசேட ஆங்கிலப் பிரிவு
ஆரம்பம்: 11.01.2002
வெள்ளி காலை
7.00மணி (ப.நே.)
By.MR.B.ஜோதி
குறிப்பு→ அடிப்படையில் இருந்து ஆரம்பிக்கப்படும்.
(96793)


## 77ஆவது அகவை காணும் அம்மையாரை வாழ்த்தி வணங்குகின்றோம்



எமது சங்கப் போஷகர்
கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி
**தங்கம்மா அப்பாக்குட்டி**

அவர்களின் 77ஆவது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு அவரை வாழ்த்தி வணங்குவதோடு, இன்றைய தினம் நடைபெறுகின்ற சிவத்தமிழ்ச் செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலகத் திறப்பு விழாவும் சிறப்புற நடைபெற அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

தெல்லிப்பழை. (96795) - இந்து இளைஞர் சங்கம்.


**NEW SCIENCE HALL**
கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்.
**2004 A/L**
**கணித, உயிரியல் பிரிவு**
(எமது வழமையான ஆசிரியர் குழு)
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
ஆரம்பம்:- 09.01.2002
காலை 10.00 மணி.
(96799)


## மரண அறிவித்தல்கள்

### மரிசலின் ஞானப்பிரகாசம்

02.01.2002 புதன்கிழமை காலமான மரிசலின் ஞானப்பிரகாசம் (இளைப்பாறிய பொலீஸ் சார்ஜன்ட்) அவர்களின் இறுதிச் சடங்குகள் நாளை (08.01.2002) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் வதிவிட இல்லமான இல.34,கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் நடைபெற்று, அவரின் பூதவுடல் நாரந்தனை சம்பேதுரு சம்பாவிலு தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நாரந்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி பிரான்ஸிஸ்கா (முத்தம்மா - மனைவி),
திருமதி றாஜினி (ஜெம்மா - மகள்).

*இல.34,கோயில் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(96794)

### திருமதி செல்லையா தெய்வானைப்பிள்ளை

இளவாலையைப் பிறப்பிடமாகவும் கொல்லங்கலட்டியை வதிவிடமாகவும் கொண்டு தற்போது ஆனைக்கோட்டையில் வசித்தவரான திருமதி செல்லையா தெய்வானைப்பிள்ளை அவர்கள் நேற்று (06.01.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லையாவின் அன்பு மனைவியும் சர்வலோகேஸ்வரி, புவனேஸ்வரி, இராசரத்தினம் (Netherland), நவரத்தினம் (இளவாலை), செல்வரத்தினம் (Netherland) ஆகியோரின் அருமைத் தாயாரும் சிவசுப்பிரமணியம் (மருந்துக் கடை, தொட்டிலடி), அனுஷாதேவி (Netherland), யோகாம்பிகை, சித்திரா (Netherland) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிரவீணா, காயத்திரி (யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை), ஆதவன், வேந்தன், ஜோனார்த்தன், ஆரோன், சாதனா, ஷாலினி (Netherland) ஆகியோரின் ஆசைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2002) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைக்கோட்டை கரிகாம்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.*

(96790)

### முத்தர் ஆறுமுகம்

**(சமாதான நீதிவான்,
முன்னாள் தலைவர் - வேலணை ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
முன்னாள் உறுப்பினர் - கிராம சபை, 6ஆம் வட்டாரம்)**

வேலணை மேற்கு, ஆறாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தர் ஆறுமுகம் நேற்று (06.01.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தெய்வானையின் அன்புக் கணவரும் பாலசுப்பிரமணியம், தெய்வேந்திரன், இராசேந்திரன், பாலேந்திரன் (லண்டன்), தவமலர் (மட்டுவில்), இரஞ்சிதமலர் (D.A.M.), குலேந்திரன் (ஜேர்மனி), சிவனேந்திரன் (வேலணை ப.தெ.வ.அ.கூ.சங்கம்), முருகேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நகுலாம்பிகை, கோகுலகுமாரி, தில்லைநாயகி, பரமேஸ்வரி (லண்டன்), சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற பேரம்பலம் (ஆய்வுகூட உதவியாளர் தாவரவியற்றுறை யாழ்.பல்கலைக்கழகம்), லதா (ஜேர்மனி), ஜெயமதி (அரியாலை ப.தெ.வ. அ.கூ.சங்கம்), வினோ (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தவச்செல்வி, தவச்செல்வம் (வேலணை ப.தெ.வ.அ.கூ.சங்கம்), மலர்ச்செல்வி, ஸ்ரீதனவதி, சதீஸ், கோகிலா, விஜிதா, வசீகரன், தர்ஷன், சரிதா (லண்டன்), சாளினி (லண்டன்), சஞ்சேய் (லண்டன்), மோகனகாந்த், அகல்யா, கவியரன், வினோஜன், மிக்ஷன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (07.01.2002) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை மேற்கு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
ஆ.பாலசுப்பிரமணியம்
(மகன் - பாலன்)

*திருவள்ளுவர் வீதி,*
*வேலணை மேற்கு,*
*வேலணை - 06*

(96802)

# புலிகளின் பகுதிகளுக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்ல அடியோடு மறுத்திருந்தார்.

அந்தப் பின்னணியில் தற்போது தொடர்ந்து நடத்தப்பட்டு வந்த விசாரணைகளை அடுத்தே அத்துருகிரியவில் ஆயுதங்கள் பிடிபட்டிருக்கின்றன.

தேர்தல் தினத்தன்று மடவளைப் பகுதியைச் சேர்ந்த பத்து முஸ்லிம் இளைஞர்கள் உடத்தலவின்ன பகுதியில் வைத்து, முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையின் மகனின் குழுவினர் என்று கருதப்படுவோரால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். அந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வந்த பொலீஸாருக்கு அத்துருகிரிய மிலேனியம் சிற்றிப்பகுதியில் உள்ள வீடு ஒன்றில் சட்ட விரோதமாக இயங்கும் ஆயுதக்குழு ஒன்று பெருமளவு ஆயுதங்களுடன் பதுங்கியிருப்பதாகவும் -

உடத்தலவின்னப் படுகொலைக்கும் இந்த ஆயுதக்குழுவுக்கும் தொடர்பு இருப்பதாகவும் -

இரகசியத் தகவல் ஒன்று கிடைத்ததாகத் தெரிகின்றது.

இதனை அடுத்து அந்த வீட்டில் தேடுதல் நடத்துவதற்காக நீதிமன்ற உத்தரவு ஒன்றை இது விடயமாக விசாரணை நடத்தி வரும் கண்டி பொலீஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொல பெற்றுக் கொண்டார்.

இந்தச் சட்டவிரோதக் குழுவில் சில இராணுவத்தினரும் சம்பந்தப்பட்டிருப்பதாக அவருக்குத் தகவல் கிடைத்திருந்ததால் அந்த வீட்டில் இடம்பெறவிருக்கும் தேடுதல் பணிக்கு உதவுமாறு இராணுவப் பொலீஸ் பிரிவின் மார்ஷலான மேஜர் ஜெனரல் ஐவன் தஸநாயக்காவை அவர் கோரினார். அவரும் சில இராணுவப் பொலீஸாரைக் கொடுத்து உதவினார்.

அத்துருகிரியவில் சம்பந்தப்பட்ட வீடு சுற்றிவளைக்கப்பட்டது. ஓர் இராணுவ கப்டன் உட்பட ஆறு படையினர் பிடிக்கப்பட்டனர். பெருமளவு ஆயுதங்களும் சிக்கின.

இந்தத் தகவல் கிடைத்ததும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பலகல்ல, பொலீஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்குடன் தொடர்பு கொண்டார். சம்பந்தப்பட்டோர் இராணுவப் புலனாய்வுப் பணியுடன் தொடர்புபட்டவர்கள் என்றும் அவர்களை ஏதும் செய்யாமல் விடுவித்துவிடும்படியும் அவர் கேட்டுக்கொண்டார்.

இராணுவத் தளபதியின் வழிப்படுதலின்படி இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் நாயகமான பிரிகேடியர் கபில ஹெறன்டவிதனவும் பொலீஸ்மா அதிபருடன் தொடர்பு கொண்டார். அவர், பொலீஸ் அத்தியட்சகர் உடுகம்பொலவுடன் தொடர்பு கொள்ளும்படி பிரிகேடியர் ஹெறன்டவிதனவைக் கேட்டுக்கொண்டார்.

பிரிகேடியர் ஹெறன்டவிதன அதிகாரி உடுகம்பொலவுடன் தொடர்பு கொண்டு உரையாடியபோது பேச்சுக் குழம்பியது.

பொலீஸ் அத்தியட்சகர் உடுகம்பொல உடனடியாக உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்கவுடன் தொடர்பு கொண்டு தமது விசாரணைகளில் இராணுவத்தினர் முறையற்றவிதத்தில் அழுத்தம் பிரயோகிப்பதாக முறையிட்டார்.

அதையடுத்து, காரியங்கள் மளமளவென்று நடந்தேறின. கைது செய்யப்பட்டோருக்கு எதிராகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவல் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. கைது பற்றிய செய்திகள் பத்திரிகைகளுக்கு அவிழ்த்துவிடப்பட்டன. பிரதமர் ரணிலை கொல்வதற்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் அத்துருகிரியவில் சிக்கின என்ற தகவல் செய்தி ஊடகங்கள் வழியாக பரவின.

தன்னுடைய புலனாய்வு நடவடிக்கைகளுக்காக இராணுவப் புலனாய்வுப் பிரிவு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மறைவிடங்களை வைத்திருப்பது வழமை. அந்த வகையில் அத்துருகிரிய வீடு கடந்த டிசெம்பர் 15 ஆம் திகதிதான் இராணுவப் புலனாய்வுப் பிரிவால் வாடகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டது.

அங்கு வைத்து கைது செய்யப்பட்ட ஆறு படையினரில் ஒருவர் கப்டன். மற்றைய நால்வரும் சிங்களச் சிப்பாய்கள். ஆறாவது நபர் ஒரு தமிழர் ஆவார். புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேறி இராணுவத்தின் பக்கம் சாய்ந்து சிப்பாயாக சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்.

பல தற்கொலைத் தாக்குதல்களுக்கு சூத்திரதாரியாக விளங்கியவர் எனக் கருதப்படும் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுப் பொறுப்பாளர் நிஸாமை (தம்பிராஜா குகசாந்தனை) கடந்த ஜூன் 9 ஆம் திகதி மட்டக்களப்பு புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் விசேட அதிரடிப் படையின் உதவியுடன் ஊடுருவி கிளைமோர் குண்டுத் தாக்குதல் நடத்திக் கொன்றது உட்பட புலிகளுக்கு எதிரான பல ஊடுருவல் தாக்குதல்களை நடத்தியது இந்தக் குழுவே என்பது இப்போது அம்பலமாகியிருக்கின்றது.

கடந்த புதன் இரவு அத்துருகிரியவில் இந்தக் குழுவினரின் மறைவிடத்தில் நடத்தப்பட்ட தேடுதலின் போது ஆள்களுக்கு எதிரான கண்ணிகள் - 10, நிலக்கண்ணிகள் - 20, டாங்கிகளுக்கு எதிரான இலகு ஆயுதங்கள் - 4, ரி.56 ரைபிள்கள்-2, மகஸின் - 12, ரவைகள் - 418, ஏ.கே.47 ரக ரைபிள் - 1, புலிகளின் சீருடைகள் - 66, பத்து கிலோ எடையுள்ள கிளைமோர்கள் - 7, எட்டுகிலோ கிளைமோர் - ஒன்று, எக்ஸ்புலோடர்கள் - 17, வயர்கள், சயனைட் வில்லைகள், ரிமோட் கொன்றோல் கருவிகள் மற்றும் தேமோபற்றிக் ஆயுதங்களைப் பொலீஸார் கைப்பற்றினர்.

கடைசியாக மிக முக்கிய தாக்குதல் ஒன்றை ஊடுருவித் தாக்குவதற்காக புறப்பட்ட இந்தக் குழு அரசின் மோதல் தவிர்ப்பு அறிவிப்பு வரவிருந்ததை அடுத்து - தங்களது தாக்குதல் திட்டம் பல்வேறு எதிர்விளைவுகளை ஏற்படுத்தலாம் என்ற காரணத்தால் - அதனை இடைநடுவில் கைவிட்டு டிசெம்பர் 21 ஆம் திகதி அத்துருகிரிய மறைப்பிடத்துக்கு திரும்பியது.

தமது தாக்குதல் திட்டத்துக்காகத் தம்முடன் எடுத்துச் சென்ற பூகோளதள நிலைபற்றி அறிய உதவும் உயர்தர தொழில்நுட்பக் கருவிகள், தொலைத் தொடர்பு சாதனங்கள் என்பவற்றை கொழுவல முகாமில் அந்தக் குழு ஒப்படைத்தது.

இவ்வாறு இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவில் இரகசியமாக செயற்பட்டு பல வெற்றிகரத் தாக்குதலை நடத்தி வந்த உளவுப் படை ஒன்று பற்றிய இரகசியம் பொலீஸாரின் தேடுதல் மற்றும் கைது நடவடிக்கையால் அம்பலத்துக்கு வந்திருக்கின்றது.

வெற்றிகரமாகச் செயற்பட்டு விடுதலைப் புலிகளுக்கு பெரும் தலையிடியைக் கொடுத்து வந்த பயங்கரவாத எதிர்ப்பு படையணி ஒன்று பற்றிய தகவலை அம்பலப்படுத்தி, அதனைக் காட்டிக் கொடுத்திருப்பதற்காக பொலீஸார் மீதும் புதிய அரசின பாதுகாப்பு நிர்வாக முறை மீதும் உயர் இராணுவ அதிகாரிகள் பெரும் சீற்றம் கொண்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்ட ஆறு படையினரும் நேற்றுமுன்தினம் இரவு வரை கண்டிப் பகுதியில் வெளியே தெரியாத ஓர் இடத்தில் அறை ஒன்றுக்குள் விட்டுப் பூட்டப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு பொலீஸாரினால் கடுமையாக விசாரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## வாஜ்பாய்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இரு தலைவர்களும் சந்தித்துப் பேச தானே ஏற்பாடு செய்ததாக ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

"காத்மண்டுவில் இருந்து புறப்படுவதற்காக இருநாட்டின் தலைவர்களுடனும் நான் தரித்து நின்ற சமயம் பிரத்தியேகமான கலந்துரையாடலை அவர்கள் நடத்துவதற்கு ஆலோசனை வழங்கினேன். சுமார் பத்துப் பதினைந்து நிமிட நேரம் இரு தலைவர்களும் பேசினர். சுமார் 15நிமிடங்களின் பின்னர் கலந்துரையாடலை தொடருமாறு அவர்களிடம் கூறிவிட்டு நான் அங்கிருந்து புறப்பட்டேன்.

"பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கத்தை இரு தரப்பினரும் கொண்டிருந்ததால் இந்தச் சந்திப்பு அவர்களுக்குப் பேருதவியாக இருந்திருக்கும்" - என்று ஜனாதிபதி குமாரதுங்க தெரிவித்தார். (ஐ-6-9)


**NEW SCIENCE COLLEGE**

கன்னாதிட்டி, வெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம்.

**2004 A/L கணிதப் பிரிவு**

பௌதிகவியல் { திரு.கருணாநிதி / திரு.குகன்

இரசாயனவியல் - திரு.மகேஸ்வரன்

இணைந்த கணிதம் { திரு.பத்மநாதன் / திரு.அம்பிகைபாகன் (96800)

**வர்த்தகப் பிரிவு**

கணக்கீடு - திரு.தவா

ஆரம்பம் 09.01.2002 காலை 10.00 மணி.



உ

**ஆங்கில வைத்திய வசதி**

டாக்டர் முருகானந்தன்

ஆங்கில வைத்தியசாலை

மருதடி, பிரதான வீதி,

பருத்தித்துறையில்

01-01-2002 தொடக்கம்

**யாழ்.**

**M.B.B.S. டாக்டர்களின்**

வைத்திய சேவை

ஆரம்பிக்கப்பட்டுள்ளது

என்பதை அறியத்தருகின்றோம்.

- நிர்வாகம் -

(C/20125)



**ராஜா** யாழ்ப்பாணம்

நாளை மட்டும்

ஷியாம், சிம்ரன், ஜோதிகா நடிக்க

**12 B**

தினசரி:- 10.30, 2.30 (புதிய நேரம்)

சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00

(C/20092)

09-01-2002 முதல்

**விரலுக்கேத்த வீக்கம்**

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

கமல் (இரட்டை வேடம்),

மனீஷா, ரவீனா

மற்றும் பலர் நடித்த

**ஆளவந்தான்**

(ரீல்ஸ்)

தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.)

(C/20090)

**லஷ்சுமி** இணுவில்

13ஆம் திகதி வரை

அஜித், மம்முட்டி, தபு, ஐஸ்வர்யா

**கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்**

(ரீல்ஸ்)

தினசரி 10.30, 2.30 (ப.நே.)

(96801)

**நாகம்ஸ்** சுன்னாகம்

8ஆம் திகதி வரை

அஜித், பார்த்திபன், தேவயானி நடித்த

**நீ வருவாய் என**

(ரீல்ஸ்)

காட்சிகள் 11.00, 3.00

(96761)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிறுவன

சிரேஷ்ட விஞ்ஞான ஆசிரியர்

திரு.ந.விஜயகுமார் அவர்களின்

பாசமிகு தந்தையார்

### சின்னத்தம்பி நடராசா

அவர்கள் காலமானதையிட்டு துயர் அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ரலன்ற் இன்ஸ்ரிரியூட்,

இயக்குனர், ஆசிரியர்கள், ஊழியர்கள்.

(C/20124)

## கண்ணீர் அஞ்சலி

எமது ஊழியர், நலன்புரிச்சங்க நிர்வாக உறுப்பினர்

திரு.ஆ.சிவனேந்திரன் அவர்களின் அன்புத் தந்தையும்

ஊழியர் நலன்புரிச் சங்க உறுப்பினர்

பா.தவச்செல்வம்

அவர்களின் பேரனுமாகிய

### முத்தர் ஆறுமுகம்

(சமாதான நீதிவான்)

அவர்கள் காலமானதையிட்டு துயர் பகிர்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,

வேலணை ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

(96803)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி நடராஜா

கோயிற்கடவை, துன்னாலை மத்தியைச் சேர்ந்த சின்னத்தம்பி நடராஜா நேற்று (06.01.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நல்லம்மாவின் அன்புக் கணவரும் இலஷ்சுமியம்மா (பிரான்ஸ்), முருகேசபிள்ளை (பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்), பாலச்சந்திரன் (புற்றளை மகா வித்தியாலயம்), ஜெயபூபதியம்மா, விஜயகுமார் (ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி), புஸ்பநாதன் (பிரான்ஸ்), ஜெகநாதன் (கொழும்பு), சிவநாதன் (பிரான்ஸ்), செல்வநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவலிங்கம் (பிரான்ஸ்), சுஷிலா (வலயக் கல்வித் திணைக்களம், வடமராட்சி), தங்கம்மா, சண்முகநாதன், இதயகலா, சுகந்தி (பிரான்ஸ்), நாகேஸ்வரி (பிரான்ஸ்), தனுஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2002) அவரது இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேருண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

*கோயிற்கடவை,*
*துன்னாலை மத்தி,*
*கரவெட்டி.*

தகவல்:
ந.முருகேசபிள்ளை
(மகன்)

(C/20123)

### சின்னத்துரை முத்துக்குமாரு

(வர்த்தகர் - சாவகச்சேரி)

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் (ஊரதீவு) பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது இல.45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான சின்னத்துரை முத்துக்குமாரு நேற்று (06.01.2002) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஜெயக்குமாரியின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மு.ஜெயக்குமாரி (மனைவி),
க.மருதலிங்கம் (சகலன்),
(வர்த்தகர், சாவகச்சேரி).

*இல.45,மணிக்கூட்டு வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(96805)

### திருமதி கோபாலகிருஷ்ணன் தயாமதி

7ஆம் வட்டாரம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கோபாலகிருஷ்ணன் தயாமதி இந்தியாவில் காலமானார்.

அன்னார் கோபாலகிருஷ்ணன் (சுவிஸ்லாந்து) அவர்களின் அன்பு மனைவியும், ஜெகதீசன் - நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும் செல்லத்தம்பி - சிவபாக்கியம் தம்பதியினரின் மருமகளும் விஜிதா, திவாகர், மயூரா, கவிப்பிரியா, பவித்திரா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*7ஆம் வட்டாரம்,*
*புங்குடுதீவு.*

தகவல்:
நா.ஜெகதீசன்
(தந்தை).

(96804)

### வேலுப்பிள்ளை காராளசிங்கம்

பத்தமேனி, அச்சுவேலியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை காராளசிங்கம் 05.01.2002 சனிக்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அன்னார் கறுத்தார் வேலுப்பிள்ளையினதும் அவரின் அன்பு மனைவி வள்ளிப்பிள்ளை அவர்களின் உத்தம புதல்வரும் மிட்டிலாங்கூடல் நடராஜ அம்பலவாணர் விநாயகர் ஆலய தர்மகர்த்தாவும் அன்னபூரணத்தின் அன்புக்கணவரும் விக்கினேஸ்வரன் (கனடா), குகேஸ்வரன் ஆகியோரின் அருமைத்தந்தையும் காலஞ்சென்ற அன்னபாக்கியம் மற்றும் சேனாதிராசா, இராஜேஸ்வரி, சத்தியபாலதேவி, புவனேஸ்வரி, அன்னலஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், இராசரத்தினம், துரையப்பா மற்றும் வீரவாகு, இரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் சுசீலாதேவி (கனடா), சுகந்தலஷ்மி, தவபாலபர்வதாம்பிகை (மலேசியா), லீலாதேவி (மலேசியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் விசாலகன் (கனடா), சுரேந்திரன் (கனடா), சிவசுதன், பரசுதன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற விக்கினேஸ்வரன் மற்றும் வளர்மதி, சிவதர்சினி கேதீஸ்வரன் ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.01.2002 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றன.

*பத்தமேனி,*
*அச்சுவேலி.*

தகவல்:-
வே.சேனாதிராசா
(சகோதரர்).

(96806)

## நவாலி களையோடை அம்மன் ஆலய

# தீர்த்தக்கேணியில் இறங்கி அசுத்தப்படுத்தும் விசமிகள்!

வலி.தென்மேற்கு ஜன.7

நவாலி, களையோடை கண்ணகை அம்மன் ஆலய புனித தீர்த்தக்கேணி விசமிகளால் அசுத்தப்படுத்தப்பட்டு வருவது குறித்து அடியார்கள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

தீர்த்தக்கேணியில் இறங்கி நீராடும் இளைஞர்கள் ஆலயத்திற்கு வரும் பக்தர்களுடன் அவமரியாதையாக நடந்து கொள்வதுடன் அவர்களைச் சீண்டவும் செய்கின்றனர். ஆடைகள் அனைத்தையும் கழற்றி எறிந்துவிட்டு அவர்கள் கேணியில் கும்மாளம் அடிக்கின்றனர். இதனால் ஆலயத்துக்கு வரும் அடியார்கள் அவஸ்தைப்பட நேரிடுகிறது.

அண்மையில் கேணியில் குளித்துக் கொண்டிருந்தவர்களைத் தடுக்க முற்பட்டுள்ளார் ஆலய பிரதமகுரு. அவ்வேளை அவரைக் கல்லால் தாக்க முற்பட்டுள்ளார் இளைஞர் ஒருவர்.

இவ்வாறான அடாவடித்தனங்களை ஒழிக்க ஊர்மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று அடியார்களை கேட்டுள்ளனர்.

இதேவேளை -

ஆலய திருப்பணி உண்டியல் பல தடவை உடைக்கப்பட்டுள்ளதாகவும் -

ஆலயத்திற்குப் போடப்பட்டிருந்த மின்கம்பங்கள் இடிந்து வீழ்த்தப்பட்டு கம்பிகள் கழற்றப்பட்டு எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## 58 பேர் கைது

மூன்று மீன்பிடிப் படகுகளில் இத்தாலிக்குச் செல்லப் புறப்பட்ட 58 இலங்கையர்கள் நேற்றுமுன்தினம் நீர்கொழும்புப் பகுதியில் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். நீர்கொழும்பு கொஸ்கொடகரையிலிருந்து இவர்கள் புறப்படவிருந்த மூன்று படகுகளையும் பொலீஸார் கைப்பற்றினர். இவர்கள் ஒவ்வொருவரும் தலா 3லட்சம் ரூபாவை பயணக் கட்டணமாக முகவர்களிடம் செலுத்தியிருந்தது தெரியவந்திருக்கிறது. (ஐ-6)

## 'சிரச'....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தீ விபத்துக்கான காரணம் எது என்பது உடனடியாக உறுதிப்படுத்தப்படவில்லை. மின் ஒழுக்கினால் தீ பரவியதாக ஒரு தகவல் தெரிவித்தது. குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் உதவியுடன் விசாரணைகள் நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## முப்படைகளின் தலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலை அடுத்து நடத்தப்பட்ட இராணுவ நீதிமன்ற விசாரணைகளால் பாதிப்புற்றிருக்கும் மூத்த அதிகாரிகள் சிலர் விமானப்படைத் தளபதிக்கு எதிராகத்திரண்டிருப்பதாகத் தெரிகின்றது.

கடந்த பொதுத் தேர்தலின் போது ஹெலிக்கொப்டர் மூலம் அரசுத்தரப்பு அரசியல்வாதிகளுக்கு கண்டிக்கு ஆயுதங்கள் கடத்திச் சென்று கொடுத்ததாகவும் -

தேர்தலில் தோல்வியுற்ற பின்னரும் கூட ஜெனரல் அனுருத்த ரத்வத்தையும் அவரது குடும்பத்தவர்களும் பயன்படுத்த விமானப்படை ஹெலிக்கொப்டர்களை கொடுத்து உதவியதாகவும -

விமானப்படைத் தளபதிக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள்.

கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் அந்த அரசுக்கு ஆதரவாக - தனது கடமைகளுக்கு முரணாக - செயற்பட்டவர் என்று குற்றம் சுமத்தப்பட்டு வரும் பொலீஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கும் இப்போது சர்ச்சையில் சிக்கியிருக்கின்றார்.

புதிய ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் எந்தநேரமும் இவர் வீட்டுக்கு அனுப்பப்படலாம் என்று எதிர்பாக்கப்படுகின்றது.

லக்கி கொடித்துவக்குவின் மகன றன்மல் கொடித்துக்கு உதவிப் பொலீஸ் அத்தியட்சகராகப் பணி புரிந்து வருகின்றார். அந்தப் பதவியைப் பெறுவதற்கான அடிப்படைத் தகுதி அற்றவர் அவர் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பாக ஊழல் மற்றும் லஞ்ச ஆணைக்குழு இப்போது மும்முரமாக விசாரணை நடத்தி வருகின்றது.

லக்கி கொடித்துவக்குக்கு எதிராகவும் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் அணிதிரண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. (உ)

## நீல் டயஸின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் ஏப்ரல் 12 ஆம் திகதி வரை ஜனாதிபதி நீடித்திருக்கின்றார்.

கடந்த வருடம் ஏப்ரல் 12 ஆம் திகதி 55 வயதைப் பூர்த்தி செய்த மேஜர் ஜெனரல் டயஸின் பதவிக் காலத்தை அன்றிலிருந்து கடந்த டிசெம்பர் 31 ஆம் திகதி வரை ஜனாதிபதி நீடித்திருந்தார்.

ஜெனரல் பலகல்லவுக்கு அடுத்த இராணுவத் தளபதி பதவிக்கு மேஜர் ஜெனரல் நீல் டயஸை முன்னைய பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு வளர்த்து வந்ததாகக் கதைகள் அடிபட்டுவந்தன.

ஆனால் இராணுவத் தளபதி பலகல்லவுக்கு அடுத்த நிலையில் இராணுவத்தின் கீழ்மட்ட அதிகாரியாகப் பணி புரிந்த மேஜர் ஜெனரல் டயஸுக்கும், தளபதிக்கும் இடையில் உறவு நிலை சுமுகமாக இருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பின்னணியில்தான் டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் மேஜர் ஜெனரல் நீல் டயஸை ஓய்வுபெற்றுச் செலவதற்கு தளபதி பலகல்ல சிபாரிசு செய்தார்.

அந்த சிபாரிசு ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்டு அவருக்கு ஏப்ரல் 12 வரை பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஆவணங்கள் ஜனாதிபதி செயலகத்திலிருந்து புதிய பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

இராணுவ அதிகாரிகளின் பதவிக காலம் 55 வயதுக்குப்பின்னர் நீடிக்கப்படுவதை புதிதாகப் பதவியேற்றுள்ள ஐக்கிய தேசிய முன்னணி அரசு கொள்கை அளவில் வரவேற்கவில்லை என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையில் மேஜர் ஜெனரல நீல் டயஸின் பதவிக்காலத்தை நீடிக்கும் ஜனாதிபதியின் உத்தரவை ஐக்கிய தேசிய முன்னணியின் பாதுகாப்பு அமைச்சர் எப்படிக் கையாளப்போகிறார் என்பது தற்போது கேள்விக் குறியாக உள்ளது. (உ)


வாடிக்கையாளர்களுக்கொரு நற்செய்தி!

இதோ மிகவிரைவில் புத்தக அட்டைகளுக்கான (Cover)
"கூல் லெமனேற்றிங்" (Cool Laminating) சேவையை முதன்முதலில்
யாழ்நகரில் அறிமுகம் செய்கிறோம்.

அத்துடன்

※ ஓவ்(F)செற் பிறின்ரிங் மெசின்கள்
※ மெற்றல் பிளேற் மேக்கர்கள் (கீற்ரர்கள்)
※ கம்பியூட்டர்கள்
※ INK வகைகள்
※ மெற்ரல் பிளேற்றுக்கள்
※ பேப்பர் பிளேற்றுக்கள்
※ டெவலப்பர்
※ பிளேற் கிளீனர்
※ ஸ்பொஞ்
※ டாம்பர் குளோத்
※ Possitive வகைகள்

போன்றவற்றையும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்
(மொத்தமாகக் கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவுண்டு)

ஸ்ரீராம் ஓவ்(F)செற் பிறின்ரேர்ஸ்
250, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

மேலும் தொடர்புகளுக்கு:

ஜெயா ஓவ்(F)செற் பிறின்ரேர்ஸ்
B1S1, Bloemendhal Flats,
Kotahena, Colombo -13
T.P - 478443/478444.

ஸ்ரீராம் ஓவ்(F)செற் பிறின்ரேர்ஸ்,
கொடிகாமம் வீதி,
நெல்லியடி, கரவெட்டி.
(96620)





உ

22ஆம் நூற்றாண்டில்
நெஞ்சில் என்றும் நீங்காத
இடத்தைப் பிடித்துக் கொண்ட

சாயி வீடியோ

கொம்பியூட்டர் உலகில் தரமும் தொழில்நுட்பமும் கூடிய
RT 2000 (வீடியோ காட்) துணைகொண்டு என்றும் நினைவில் நிற்கக்கூடிய
மங்களகரமான நிகழ்வுகளை புதுமைகளைப் புகுத்தியும் CD மூலம்
பதிவுசெய்து கொள்ளலாம்.



★ முற்றிலும் நவீன மயமான புதுமெருகூட்டப்பட்ட
சொக்கட்டான் பந்தல்கள்
★ 10 அடி தூரத்துக்கு ஒரு மின்விசிறி ★ விநோத அலங்கார விளக்குகள்
★ புத்தம்புதிய மணவறைகள் ★ குஷன், பிளாஸ்ரிக் கதிரைகள்
★ பந்திப் பாய்கள் ★ பிளாஸ்ரிக் பாய்கள் ★ நிலவிரிப்புகள்
★ இருக்கை விரிப்புகள்

மற்றும்

★ நிகழ்வுக்குத் தேவையான பாத்திரங்கள் ★ சில்வர் பாத்திரங்கள்
பூப்புப் புனித நீராட்டு விழாவுக்கான
★ சுழல் தாமரை ★ அன்ன வடிவு ★ ஏணிப்படிகள் ★ குத்துவிளக்குகள்
★ பூக் கூடைகள் ★ தலையில் சூட்டும் குடைகள் ★ பூங்கா ★ நீர்அருவி
★ மலை அருவி ★ பசும் புற்றரைகள்
★ ஊஞ்சல் ★ தடாகத் தாமரை

இப்படி இன்னும் பலப்பல

CD மூலம் பாடல் பதிவு, கறுப்பு,வெள்ளை
உட்புற, வெளிப்புறப் படப்பிடிப்பு முதலியன
ஒரே கூரையின் கீழ் பெற்றிட

சாயி வீடியோ அன் ஸ்ரூடியோ

பஸ் நிலையம் முன்பாக, அச்சுவேலி.

குறிப்பு : நக்கா வீதியில் ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளவும்

29 நக்கா வீதி,
ஜோன் பொஸ்கோ முன்பாக,
யாழ்ப்பாணம்.
(C/21115)



சைன்

உடுவில்.
2004 A/L.
கலை, வர்த்தகப் பிரிவுகள்
09-01-2002
மாலை 3.00 மணிக்கு
ஆரம்பம்.
(96686)



BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்.
பிரிவு 2
SPOKEN ENGLISH with GRAMMAR
By.
M.A.HARI
ஆரம்பம்: 08-01-2002 செவ். 9.00 a.m.
(மாணவர் தொகை வரையறுக்கப்பட்டிருப்பதால் அனுமதிக்கு முந்துங்கள்)
(96784)



A/L 2004
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்: 12-01-2002
சனி 8 மணி
விக்னா
கல்வி நிறுவனம்
(96783)



பொருளியற் கல்லூரி
(இரு இடங்களில்)
A/L 2004
கலை, வர்த்தகம்
ஆரம்பம்:- 12-01-2002
யாழ்நகரில் - 9.00 a.m.
இணுவிலில் - 3.00 p.m.
(96796)



BEACON
வதிரி கரவெட்டி
A/L 2004
(கணித, உயிரியல்)
ஆரம்பம்: 09.01.2002
புதன் 10.00 மணி
(96747)



A/L ~ 2004
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
ஜனவரி - 12
(சனி)
காலை - 8 மணி
(C/20122)
DMI யாழ்நகர்



வாழ்த்துகின்றோம்
'கலையகம்' கல்வி நிலையம்
ஆவரங்கால் - அச்சுவேலி - புத்தூர்
"9A" மாணவி தமனிகை (மா.நிலை - 05)
"Logic" பாடத்திட்டப்படி (மா.நிலை - 01)
(வேம்படி மகளிர் கல்லூரி)
Logic "A" மாணவர்கள்

01. து.கௌசிகா
02. ம.பாரதி
03. இ.ஜெயதர்ஷினி
04. செ.தாட்ஷாயினி
05. இ.மிரிஷாஜினி
06. இ.சுகந்தினி
07. ச.நித்தியவாணி
08. அ.லக்ஷாந்தி
09. சி.பிரவீனா
10. இ.நந்தினி
11. ச.கஜனிகா
12. ம.செல்வராணி

ஆசிரியரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
Logic ஆசிரியர், இயக்குநர்,
S.R.J.சுதன், A/L 2002, 2003 மாணவர்கள்.
(96776)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.01.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.